வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

10.02.2021 புதன்கிழமை




# இலங்கை சட்டத்தில் தலையிட ஐ.நாவுக்கு உரிமை கிடையாது!

## கல்வி அமைச்சர் பீரிஸ் காட்டம்



கொழும்பு,பெப்.10

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட், இலங்கை தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில் ஐ.நாவின் பலவீனத்தை கண்டோம். நாட்டின் அரசமைப்பு திருத்தம், இராணுவ அதிகாரிகளை உயர்ந்த பதவிகளுக்கு நியமிக்கின்றமை, தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களில் தலையீடு செய்ய ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கோ அல்லது அதன் ஆணையாளருக்கோ உரிமையில்லை என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

02

## பங்காளிகள் என்ன சொன்னாலும் பெரமுனவிடம்தான் இறுதி முடிவு!

### அமைச்சர் கெஹலிய திட்டவட்டம்

கொழும்பு,பெப்.10

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பது ஒரு பரந்த கூட்டணியாகும். எனவே இதன் பங்காளிக் கட்சிகளுக்கு கோரிக்கைகளை முன்வைப்பதற்கு உரிமை உள்ளது. ஆனால் இறுதித் தீர்மானங்கள் கட்சியின் உயர் மட்டத்திலேயே எடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இணையவழியூடாக இடம்பெற்றது. இதன் போது பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவம் மாற்றப்படவேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்த கருத்துக்களுக்கு அதன் பொதுச் செயலாளர் பதிலளித்துள்ளார்.

இவற்றை அவதானிக்கும் போது கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதைப் போன்று தோன்றுகிறதே? என்று கேட்ட

02

## நேற்று 975 பேருக்கு கொரோனா

**தொற்றாளர் எண்ணிக்கை 71 ஆயிரத்தை தாண்டியது**

கொழும்பு,பெப்.10

நாட்டில் நேற்று மேலும் 975 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதனால் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 71 ஆயிரத்து 210 ஆக அதிகரித்

02

## எனக்கு ஏதும் பாதகம் ஏற்படின் அரசே பொறுப்பேற்கவேண்டும்

### சபையில் சுமந்திரன் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.10

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட விஷேட அதிரடிப்படை (எஸ்.ரி.எப்.) பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ள நிலையில் தனக்கு ஏதாவது பாதகம் ஏற்படுமாயின் அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்றும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் பங்கேற்ற பின்பே தனக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு நீக்கப்பட்



டுள்ளது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

02

## 27 பொருள்கள் விலை குறைப்பு சாத்தியம் இல்லை

கொழும்பு,பெப்.10

27 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கடந்த 8 ஆம் திகதி முதல் குறைக்கப்படும் எனவும் இந்தக் கட்டுப்பாட்டு விலை எதிர்வரும் 3 மாத காலத்துக்கு மாற்றம் செய்யப்படாது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன அண்மையில் தெரிவித்

02

## எமக்கு உரிமையும் இல்லை அபிவிருத்திகளும் இல்லை

### சபையில் சாணக்கியன் கவலை

கொழும்பு,பெப்.10

எமது மக்களுக்கு உரிமையும் இல்லை அபிவிருத்தியும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கவலை வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: நவகிரி என்ற செயல்திட்டத்தில் அவசர வான்கதவு என்பதொன்று காணப்படுகிறது. 2010ஆம் ஆண்டிலிருந்து அவசர வான்கதவு

02

## பேரணியில் பங்கேற்றோருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.10

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் பேரணியில் பங்கேற்றவர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் பருத்தித்துறை நீதிமன்றில் 3 பொலிஸ் நிலையங்களாலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பேரணியில் பங்கேற்ற அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் 3 பொலிஸ் நிலையங்களினால், பி அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே பேரணிக்கு தடை கோரி ஏ அறிக்கையூடாக பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களால் தொடரப்பட்ட வழக்குக்கு நீதிமன்று வழங்கிய தடை

02

## ‘இன்றும் இனப்படுகொலை’ வார்த்தையால் கடும் சர்ச்சை

### கஜேந்திரகுமார் எம்.பியுடன் நேற்று ஆளும் - எதிர்த்தரப்பு வாக்குவாதம்



கொழும்பு,பெப்.10

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதி கோரியும், இன்றும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இனப்படுகொலையை தடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துமே பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான தமிழர் எழுச்சிப் பேரணி

02

## வடக்கில் மேலும் 6 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

யாழ்ப்பாணம்,பெப்.10

வடக்கு மாகாணத்தில் மேலும் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 3 பேர் கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம், யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 665 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்

02

## இன்றும்...

இடம்பெற்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபையில் தெரிவித்ததை அடுத்து ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

'இன்றும் இனப்படுகொலை' என்ற வார்த்தையைப் பயன்படுத்த முடியாது எனக்கூறி ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாதிட்டபோதிலும் தன்னால் இந்த வார்த்தையை மீளப்பெற முடியாது என கஜேந்திரகுமார் எம்.பி வாக்குவாதப்பட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று தொழில் அமைச்சின் கீழ் உள்ள ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்னை எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா-இனப்படுகொலை இடம்பெற்றதாகவும், இன்றும் இடம்பெற்று வருவதாகவும் கஜேந்திரகுமார் எம்.பி. கூறுகின்றார். அவர் எதனைக் கருத்தில் கொண்டு இவ்வாறு கூறுகின்றார் எனத் தெளிவில்லை என கேள்வி எழுப்பினார்?

இதற்குப் பதிலளித்த கஜேந்திரகுமார் எம்.பி :- இனப்படுகொலை என்பது வெறுமனே இனத்தை கொள்வது மட்டுமல்ல, ஒரு சமூகத்தை இலக்கு வைத்து அவர்களின் அடையாளத்தை அழிப்பதும் இனப்படுகொலை என்றே கருதப்படும்.

2009 ஆம் ஆண்டு வரையில் உயிர்களை இலக்குவைத்து நடத்தப்பட்டதை போலவே இப்போதும் திட்டமிட்டு வடக்கு கிழக்கு தமிழர்களின் அடையாளங்களை அழிக்கும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது - என்றார்.

இதன்போது ஆளும் தரப்பில் இருந்து ஒழுங்குப்பிரச்னை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் :- இனப்படுகொலை என்பது எமக்குத் தெரிந்த வரை திட்டமிட்ட கொலையாகும்.

அதிகளவான மக்களை அல்லது ஒரு இனக்குழுவை கொள்வது இனப்படுகொலை என அர்த்தப்படும். ஆனால் நீங்கள்கூறும்காரணிகளுக்கு இனப்படுகொலை என்ற வார்த்தையை பயன்படுத்துவது முற்றிலும் தவறான ஒன்றாகும். எனவே அதனை திருத்திக்கொள்ளுங்கள்-என்றார்.

கஜேந்திரகுமார் எம்.பி:- இனப்படுகொலைக்கான வரைவிலக்கணம் பற்றி நான் இங்கு பேச வரவில்லை. எந்த விதத்திலும் இதற்கான வரைவிலக்கணத்தை முன்வைக்க முடியும். ரோமானிய பிரகடனத்தின் ஐந்தாம் உறுப்புரையை வாசியுங்கள்.

ஹர்ஷ டி சில்வா:- இனப்படுகொலை என்ற வார்த்தையை நீங்கள் சரளமான விடயங்களுக்கு பயன்படுத்த முடியாது.

கஜேந்திரகுமார் எம்.பி:- நான் ஒரு தகுதியான சட்டத்தரணி, எனக்கு எவ்வாறு வார்த்தைகளை பயன்படுத்துவது என்பது தெரியும். இனப்படுகொலை நடந்தது. அதற்கான நியாயத்தை கேட்கிறோம். இதற்கான சாட்சியில் நானும் ஒருவன், அதேபோல் இன்றும் எமது அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றது. அதனையே நான் அவ்வாறு கூறுகின்றேன்.

இராஜாங்க அமைச்சர் நிவாட் கப்ரால்:- நீங்கள் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்த முடியாது. நீங்கள் கூறும் காரணிகளுக்குப் பொருத்தமான வார்த்தை இதுவல்ல.

கஜேந்திரகுமார் எம்.பி:- நான் சட்டமுறைமைக்கு அமையவே பேசுகிறேன். நீங்கள் ரோமானிய பிரகடனத்தைப் பாருங்கள். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக கூறும் குற்றச்சாட்டை ஏன் உங்களால் விசாரிக்க முடியாதுள்ளது. முதலில் அதனை செய்யுங்கள். (அ-எ)

## 27 பொருள்கள்...

திருந்தபோதிலும் நடைமுறையில் அந்த விடயம் சாத்தியமாகவில்லை என நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கத் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள என்.எம்.பெரேரா கலாசார மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ-எ)

## வடக்கில்...

மூலமே இந்த 6 பேருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி - கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களுடன் நேரடித் தொடர்புடைய இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் சுயதனிமைப்பட்டிருந்தனர்.

அத்துடன் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக தொழில்நுட்ப பீடத்தில் கல்வி கற்கும் புத்தளத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கும், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது- என்றார். (அ-எ)

## எனக்கு...

ஊடகப் பேச்சாளர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு தொடர்பான விவாதத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அநேக காலமாக ஆயிரம் அடிப்படைச் சம்பள உயர்வுக்காய் கோரிக்கை முன்வைத்தபோதும் அதிக ரிக்கும் வாழ்க்கைச் செலவுடன் நோக்குகையில் தற்போது இது இரண்டாயிரம் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

இருப்பினும் அந்த ஆயிரம் ரூபா உயர்வு கூட இன்னும் வழங்கப்படாது இருக்கின்றது.

கடந்த சில நாள்களாக பொதுவில் முதல் பொலிகண்டி வரையான நடைபயணத்தில் நாம் 10 கோரிக்கைகளை அரசாங்கத்திடம் முன்வைத்திருந்தோம்.

அவற்றுள் இந்த ஆயிரம் ரூபா சம்பள உயர்வும் ஒன்றாகும்.

இந்தப் பேரணி சிவில் சமூகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு எமது கட்சியினாலும் ஆதரிக்கப்பட்டது.

இவை நியாயமான கோரிக்கைகளாகவும் நீதிக்கான விடயங்களாகவும் காணப்பட்டதுடன் ஜனநாயக முறையில் எமது எதிர்ப்பை நாம் தெரிவித்திருந்தோம்.

இப்பேரணி சமாதானமான முறையில் நடைபெற்றதுடன் அநேகர் திரண்டு வந்து தமது ஆதரவைத் தெரிவித்து இதனை வெற்றிகரமாக நிறைவு செய்தனர்.

எனவே இவர்களின் கோரிக்கைகளை கவனத்தில் எடுத்து வடக்கு - கிழக்கு மக்களுக்குப் பதிலளிக்க வேண்டும் என அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தப்பேரணி நிறைவுற்ற மறுகணமே எனக்கு வழங்கப்பட்டிருந்த விசேட பாதுகாப்பு நீக்கப்பட்டது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் எனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக நான் எங்கும் முறையிடாத போதும் அரசாங்கமே எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்தது.

எனவே எனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக எனக்குத் தெரிவிக்காது அல்லது நான் முறையிடாத போது அரசாங்கம் அநேகமானோரை தடுப்பில் வைக்குமானால் தற்போது அதை மீளப்பெறுவதேன்?

ஒருவேளை இவ்விடயங்கள் உண்மையாக இருந்த போதும் நான் பேரணியில் பங்குபற்றியதன் விளைவாக அரசாங்கம் என் மீது எரிச்சல் அடைந்திருக்கலாம்.

அல்லது கூறப்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பான விடயங்கள் பொய்யாகவும், அரசு அப்பாவி இளைஞர்களை தடுப்பில் வைத்திருப்பதற்காகவும் இருக்கலாம்.

அல்லது மிகவும் வஞ்சனை காரணமாக எனது பாதுகாப்பை அகற்றுவதன் மூலம் எனக்கு தீங்கு விளைவிக்க காத்திருப்போருக்கு சமிக்ஞை அளிப்பதாகவும் இருக்கலாம். எனவே எனக்கு ஏதாவது பாதகம் ஏற்படுமாயின் அரசாங்கமே அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்-என்றார். (அ-எ)

## இலங்கை...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நெலும்மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பெப்ரவரி 22 ஆம் திகதி இலங்கை சார்ந்த விடயங்கள் வருகின்றன. அப்போது வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவிப்பார். நாங்கள் எமது அரசின் கருத்தை ஒரு கொள்கை வரையறைக்கு உட்பட்டே வழங்குகின்றோம். சில அடிப்படை விடயங்களுக்கு அமைய இலங்கை அரசின் பதிலை ஜெனிவாவுக்கு அளிக்கின்றோம்.

அதற்கமைய, ஐ.நாவில் உள்ள அமைப்பான மனித உரிமைகள் ஆணைக்குழு என்பது அதனது கடமைகளை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளது. வரையறையை மீறி அந்த அமைப்பு செயற்பட்டால் சட்டவிரோதமானதாகும். நாட்டின் உள்நாட்டு செயற்பாடுகளுக்கு ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு எந்த உரிமையும் இல்லை. ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கை குறித்து வெளியிட்ட அறிக்கையில் அதன் பலவீனத்தை கண்டோம். நாட்டின் அரசமைப்பு திருத்தம், இராணுவ அதிகாரிகளை உயர்ந்த பதவிகளுக்கு நியமிக்கின்றமை, தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கு தலையீடு செய்ய ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கோ அல்லது அதன் ஆணையாளருக்கோ உரிமையில்லை.

இலங்கைக்கு மட்டும் வரையறைக்கு உட்பட்ட விடயமல்ல. இது மிகவும் பாரதூரமான முன்னுதாரணமாகும். உள்நாட்டுச் செயற்பாடுகளில் தலையிடுகின்ற சம்பிரதாயமானது ஐ.நாவில் உறுதியானால் அது ஏனைய நாடுகளுக்கும் ஏற்படும். நாட்டின் அரசியல் மற்றும் சமூக நிலையை ஆராய்கின்றபோது நீதியானதாக நடத்தப்பட வேண்டும். தற்போதைய அரசாங்கம் குறித்து நெருக்கம் அல்லது வெறுப்பு என்பன அதில் சம்பந்தப்படக்கூடாது.

ஐ.நா. அமைப்பின் அடிப்படை விடயங்களில் நாட்டின் இறையாண்மை, சுயாதீனத்துவம், உள்நாட்டுப் பொறிமுறைக்கு கௌரவம் அளிக்கப்படுவது அவசியம். -என்றார். (அ-எ)

## பேரணியில்...

உத்தரவு மீறப்பட்டுள்ளது எனத் தெரிவித்தே இந்த 'பி' அறிக்கைகள் பேரணியில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நீதிமன்றக் கட்டளைச் சட்டம் 55 (1), 56 2 (ஆ) ஆகிய பிரிவுகளின் கீழ் இந்த 'பி' அறிக்கைகளை பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் தனித்தனியே தாக்கல் செய்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சட்டத்தரணி கே.சுகாஷ், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கு எதிராகவே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குகள் நேற்றுத் திறந்த மன்றில் அழைக்கப்பட்டன.

பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்ட நீதிமன்று வழக்குகளை எதிர்வரும் மார்ச் 29, மே 19 மற்றும் 20 ஆம் திகதிகளுக்கு தவணையிட்டது. (அ-எ)

## பங்காளிகள்...

போதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பது ஒரு பரந்த கூட்டணியாகும். எனவே இங்கு வெள்வேறு கருத்துக்களை முன்வைப்பதற்கான உரிமை அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு மாத்திரமல்ல. சகலருக்கும் உள்ளது. எனினும் அவை தொடர்பான இறுதித் தீர்மானம் கட்சியின் உயர்மட்டத்தில் எடுக்கப்படும்- என்றார். (அ-எ)

## எமக்கு...

என்பது எமக்கு கிடையாது. இவ்வாறான நிலையில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது குளத்தை அண்மித்த பகுதிகள் பாரியளவில் பாதிக்கப்படும். 2010ஆம் ஆண்டிலிருந்து பல கோரிக்கை விடுக்கப்பட்டும் அது குறித்து இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஒவ்வொரு வருடமும் மட்டக்களப்பு மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது. வெள்ளத்தால் மூழ்கடிக்கப்படுகின்றது. மக்கள் ஒவ்வெரு வருடமும் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள குளங்கள் முறையாக புனரமைக்கப்படாமை வெள்ளப்பெருக்கிற்கான பிரதான காரணமாகும்.

உண்மையாகவே இத் திட்டமானது கைவிடப்படக் கூடாது. இடை நடுவில் இவ் திட்டத்தை நிறுத்தக் கூடாது. இத் திட்டமானது எம் மக்களுக்கான ஓர் அத்தியாவசிய தேவை ஆகும்.

எங்களுடைய உரிமை சார்ந்த கவனவீர்ப்புப் போராட்டமான பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்துக்கு கண்டனம் தெரிவிக்கப்படுகின்றதே தவிர இவ்வாறான எமது மக்களுக்கு பயனுள்ள பொருளாதாரத்தை மற்றும் வாழ்வாதாரத்தை கட்டமைக்கும் சிறந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை. எமது மக்களுக்கு உரிமையும் இல்லை அபிவிருத்தியும் இல்லை-என்றார். (அ-எ)

## நேற்று...

துள்ளது. இது தொடர்பான அறிக்கையை சுகாதார மேம்பாட்டுப் பணியகம் நேற்று இரவு வெளியிட்டுள்ளது.

இதனடிப்படையில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 912 பேர் குணமடைந்த நிலையில் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 65 ஆயிரத்து 53 ஆக அதிகரித்துள்ளது.

குணமடைந்தவர்களைத் தவிர்த்து 5 ஆயிரத்து 388 தொற்றாளர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இருப்பினும் 720 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் இருந்து வருகின்றனர். (அ-எ)

## இந்திய...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமானப் படை தளங்களுக்குரிய பிரதேசமாகவும் சீனன்குடாவே விளங்குகின்றது.

இதுதவிர, வடக்கே பலாலி விமான நிலையம், மட்டக்களப்பு விமானநிலையம், அம்பாறை விமான நிலையம் என்பவைகூட, கிழக்கே ஜப்பான் மூலமாக இரண்டாம் உலக யுத்தகாலத்தில் இலங்கைக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை எதிர்கொள்ளவே அமைக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆட்சிக்காலத்தில் பலாலி விமானநிலையம் சர்வதேச விமான நிலையமென்ற தரத்திற்கு உயர்த்தப்பட்டு, இந்தியாவுடனான சிவில் விமானப்போக்குவரத்து மீளவும் சர்வதேச தரத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால், தற்போது சீனாவினுடைய வளர்ச்சி அபரிமிதமாக தென்னாசியாவிலும், தென்கிழக்காசியாவிலும் பொருளாதார, இராணுவ பலத்தோடு விரிவடைந்து வருகின்ற நிலையிலேயே வடகடலிலுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, அனைலைதீவு ஆகியவை சீனாவுக்கு இலங்கையினால் வழங்கப்படவிருக்கின்றன என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை அரசு இவ்வாறு நெடுந்தீவு, அனைலைதீவு, நயினாதீவு என்பவற்றை சீனாவுக்கு மின்திட்டங்களை அமைப்பதற்கென வழங்குவதாககூறி கையளிக்கும் பட்சத்தில், சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் விரிவடைகின்றது எனக்குறிப்பிடுவதைவிட, இந்தியாவுடனான சீனாவின் வல்லரசுபோட்டிக்கு இலங்கை, குறிப்பாக வடக்கே இந்தியாவுக்கு அருகேயிருக்கின்ற நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு என்பவை களம் அமைக்கின்றன எனக்குறிப்பிடுவதே பொருத்தமானதாகும்.

ஈழநாடு
Eelanadu
10.02.2021 புதன்கிழமை
சார்வரி, தை 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# யாழ்ப்பாணத்திற்குள்ளும் சீனா

கொழும்பு, இந்தியாவிற்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. கிழக்கு கொள்கலன் முனைய உடன்பாட்டிலிருந்து விலகியதன் மூலம் ஏற்கனவே இந்தியாவிற்கு அதிர்ச்சியை கொடுத்திருந்தது. இந்த அதிர்ச்சியிலிருந்து புதுடில்லி வெளியில் வருவதற்கு முன்னரேயே பிறிதோர் அதிச்சியை கொடுத்திருக்கின்றது.

ஆரம்பத்தில் சர்வதேச உடன்பாடுகளை மதிக்க வேண்டிய கடப்பாடு தனக்கிருப்பதாக ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்திருந்தார். ஆனால், தற்போது அந்த நிலைப்பாட்டை கைவிட்டிருக்கின்றார். இலங்கை துறைமுக அதிகார சபை தொழிற்சங்கங்களின் எதிர்ப்பை தொடர்ந்து, கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவிற்கு வழங்குவதில்லை என்னும் முடிவெடுக்கப்பட்டது. இதற்கு பதிலாக மேற்கு கொள்கலன் முனையத்தை வழங்குவதற்கு தாம் தயாராக இருப்பதாக தற்போது அறிவித்திருக்கின்றனர். ஆட்சிக்கு வருவதற்கு உதவியவர்களை தங்களால் பகைக்க முடியதென்று கொழும்பு கைவிரித்திருக்கின்றது. அவ்வாறாயின், ஆட்சிக்கு வருவதற்கு உதவியவர்கள் மேற்கு கொள்கலன் முனையத்தை வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தால் அதனையும் கைவிட்டுவிடுவார்களா? அவ்வாறாயின், கட்சியின் ஆதரவாளர்களது விரும்பத்தினடிப்படையில்தான் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை தீர்மானிக்கப்படுமா? ஒரு நாட்டின் வெளிவிவகார விவகாரங்களை உள்ளூர் அரசியலோடு பொருத்தும் புதியவகை இராஜதந்திர நடைமுறையொன்றை ராஜபக்ஷக்கள் அறிமுகம் செய்திருக்கின்றனர்.

தற்போது யாழ்ப்பாணத்தின் நயினாதீவு, அனலைதீவு ஆகிய பகுதிகளில் சோலார் சக்தி திட்டமொன்றை மேற்கொள்வதற்கு சீன அரசிற்கு சொந்தமான Sinosar-Etechwin நிறுவனத்துடன் உன்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியிருக்கின்றது. மேற்படி இரண்டு தீவுகளும் தமிழ்நாடு இராமேஸ்வரத்திற்கு 45 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கின்றன. பொருளாதார இராஜதந்திரம் என்னும் அடிப்படையிலேயே இவ்வாறான விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், இந்தியாவுடனான திட்டங்களின்போது, பொருளாதார இராஜதந்திரம் இரண்டாம் நிலைக்கு தள்ளப்படுகின்றது. அதற்கு மாறாக, உள்ளூர் அரசியல் இராஜதந்திரம் முதன்மைபெறுகின்றது.

பொருளாதார திட்டங்களை, சீனா அதன் விரிவாக்கல் நோக்கங்களுக்காக பயன்படுத்திவருவதாக சர்வதேச ரீதியில் கடுமையான விமர்சனங்கள் உண்டு. இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் பொம்பியோ, இலங்கையின் நிலம் மற்றும் கடல் பகுதியை சீனா ஆக்கிரமித்துவருவதாக குற்றம் சாட்டியிருந்தார். ஏற்கனவே தெற்கில் அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுக நகரத்திட்டம் என்னும் நிலையில் வலுவாக காலூன்றியிருக்கும் சீனா, தற்போது மேற்படி திட்டத்தின் மூலம் வடக்கிலும் காலூன்றவுள்ளது. அதற்கான கதவு திறந்துவிடப்பட்டிருக்கின்றது. இதுதொடர்பில், இந்திய ஆதரவு தமிழ் தரப்புக்கள் எவையும் பெரிதாக அபிப்பிராயங்களை தெரிவிக்கவில்லை. தற்போது விக்கினேஸ்வரன் இது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்று தெரிவித்திருக்கின்றார்.

காங்கிரஸ் இந்தியா, இலங்கை விவகாரத்தில் நேரடியாக தலையீடு செய்தபோது, அதற்கு பின்னாலிருந்த பிரதான காரணம் இந்தியாவின் தேசிய பாதுகாப்பாகும். இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடும் வகையில் வேறு எந்தவொரு சக்தியும் இலங்கையில் கால்பதிப்பதற்கு அனுமதிக்கக் கூடாதென்னும் உடன்பாட்டை இந்திய - இலங்கை ஒப்பந்தம் உறுதிப்படுத்துகின்றது. ஆனால், தற்போது அதனை மீறும் வகையிலேயே அனைத்தும் இடம்பெறுவதாக தெரிகின்றது. இந்தியா என்ன செய்யப் போகின்றது?

# இந்திய - சீன வல்லரசு போட்டிக்கு களமிடும் வடகடல் தீவுகள்!

- அலசுவது **இராஜதந்திரி** -

*உலகில் பல நாடுகள் போர்த்துக்கேயர், டச்சுக்காரரர் மற்றும் ஆங்கிலேயர்களால் ஆளப்பட்டதென்பதே வரலாறு. 18ஆம் மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியர்கள் தமது அரசியல் மற்றும் வர்த்தக நலன்களை முன்னிறுத்தி உலகின் அனைத்து கண்டங்களிலும் தமது காலனித்துவ ஆட்சியின் கீழ் கொண்டு வந்திருந்தனர்.*

*ஐரோப்பிய நாடுகளின் காலனித்துவ ஆதிக்க விஸ்தரிப்பு பலநாடுகளை அவற்றின் தனித்துவங்களை பறிகொடுக்கவும் வைத்ததோடு, ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்களது சுரண்டல்களுக்கும் உள்ளாக்கி விட்டிருந்தது.*

*இலங்கையும் ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்களின் பிடியில் அகப்பட்ட ஒரு நாடாக இருந்ததோடு, இறுதியாக 1815ஆம் ஆண்டு முதல் 1948ஆம் ஆண்டுவரை ஆங்கிலேயர் இலங்கையை ஆண்டிருந்தனர்.*

*ஐரோப்பியர்களது வருகைக்கு முன்னர், இலங்கை இந்திய படையெடுப்புக்கும் அடிக்கடி உள்ளாகியிருந்தது. தென்னிந்தியாவில் பலம்பெற்றிருந்த சோழ மன்னர்கள் இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரதேசங்களை ஆட்சி செய்தமைக்கான வரலாற்று தடயங்கள் இன்றுவரை காணப்படுகின்றன.*

**கிழக்கிலிருந்து ஆதிக்க விஸ்தரிப்பு**

*ஆனால் தற்போது மேற்கிலிருந்தல்ல, கிழக்கிலிருந்தே ஆதிக்க விஸ்தரிப்பு உருவாகி வருவதை சீனாவினுடைய அரசியல், இராணுவ பொருளாதார கட்டமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. இந்தியாவுக்கு வடக்கே திபெத்தை தனது ஆதிக்கத்தின்கீழ் வைத்திருக்கும் சீனா, தற்போது இந்தியாவுக்கு தெற்கே இலங்கையையும் தனது பிடியின்கீழ் முழுமையாக கொண்டுவரும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதை அவதானிக்கமுடிகிறது.*

*சீனாவினுடைய பொருளாதார ரீதியான பலம் எவ்வளவு தூரம் உயர்வானது என்பதனை இலங்கையின் தலைநகர் கொழும்பை அண்டியதாக அமைக்கப்பட்டு வருகின்ற கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் எடுத்துக்காட்டுகின்றது.*

**புவியியல் அமைப்பையே மாற்றும் சீனா**

*ஒரு நாட்டின் புவியியல் அமைப்பையே மாற்றிவிடும் வகையில், கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திதிட்டம் மிக பிரமாண்டமானதாக கடலுக்குள்ளேயே அமைக்கப்பட்டதாக விளங்குகின்றது.*

*இதுதவிர, இலங்கையின் தென் முனையில் மத்தள விமானநிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் என்பவைகூட சீனாவின் வல்லரசு பலத்தை தென்னாசியாவில் பிரதிபலிக்க வைப்பவையாகவே இருக்கின்றன.*

*தென்னிலங்கையில் தனது கைவரிசையைக் காண்பித்த சீனா தற்போது தனது விஸ்தரிப்பு நடவடிக்கைககளை இலங்கையின் வடக்கு நோக்கியும் குறிவைத்துள்ளதையே அண்மைக்காலங்களில் நெடுந்தீவு, நயினாதீவு அனலைதீவு போன்ற தீவுப்பிரதேசங்களை கையேற்கவுள்ள செய்திகள் வெளிப்படுத்துபவையாக இருக்கின்றன.*

*சீனா கையேற்கவுள்ள மூன்று வடபகுதி தீவுகளில் ஒன்றான நெடுந்தீவே வடக்கே காணப்படுகின்ற தீவுகளில் பெரிதானதும் டச்சுக்காரரர்களால் நிர்வகிக்கப்பட்துமாக இருக்கின்றது. இதைவிட நயினாதீவு வரலாற்று ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் இந்தியாவுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டதாகவும் விளங்குகின்றது.*

**சப்த தீவுகள்**

*யாழ்ப்பாணக்குடாநாட்டை சூழவுள்ள வட கடலில் சப்த தீவுகள் என்று குறிப்பிடுமளவுக்கு ஏழு தீவுகள் காணப்படுகின்றன. இவற்றில் சிலதீவுப்பகுதிகள் தற்போது பண்ணைப்பாலத்தினால் யாழ்ப்பாண பெருநிலப் பகுதியோடு இணைக்கப்பட்டுள் ளன.*

*இலங்கை ஐரோப்பியர்களது படையெடுப்புகளுக்கு உட்பட்டிருந்தபோதிலும், சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருந்தது.*

*திருகோணமலையை முதன்மை நகரமாகக் கொண்டு இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களை இந்திய அமைதி காக்கும் படையினர் தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்து, வடக்கு - கிழக்கு மாகாணங் களை தமிழருடைய தாயகப்பிரதேசமென்ப தையும் உறுதி செய்திருந்தனர்.*

*இலங்கை 1815ஆம் ஆண்டு பிரிட்டிஷாரின் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்ட சமயத்தில் திருகோணமலையிலுள்ள சீனன் குடா பிரதேசமே பிரிட்டிஷாரின் விமான, கடற்படை தளங்களோடு, சீனாவின் பெயரைத் தாங்கிய பிரதேசமாகவும் விளங்கியிருந்தது.*


**சீனன் குடா**

*இரண்டாம் உலக யுத்தத்தில் ஜெர்மனியோடு துணைநின்ற ஜப்பானைக் கையாளும் விதத்திலேயே திருகோணமலையின் சீனன் குடாவை கடற்படை மற்றும் விமானப்படை தளங்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசமாக ஆங்கிலேயர்கள் மாற்றிவிட்டிருந்தனர்.*

*திருகோணமலையின் சிறிய வளை குடா பிரதேசம் ஒர் இயற்கையான எழில்மிகு துறைமுகத்திற்குரிய அம்சங்கள் அனைத்தையும் கொண்டிருந்ததோடு, சீனாவை நோக்கி காணப்பட்டதால் சீனன்குடா என* (China Bay) *ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்டிருந்தது. இலங்கையின் முக்கிய கடற்படை,*

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# யாழ். தீவு பகுதிகளில் சுகாதாரச் சிக்கல்கள்

## சபையில் சிறிதரன் சுட்டிக்காட்டு



கொழும்பு,பெப்.10

**யாழ்.குடாநாட்டில் காணப்படும் தீவுகளில் சுகாதார சிக்கல்கள் அதிகமாக காணப்படுவதாகச் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், இந்தப் பிரச்னைக்கு அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.**

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், “நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களுக்கு இதுவரை வைத்தியர்கள் நியமிக்கப்படவில்லை. அவ்வாறு அனுப்புவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, வைத்தியர்களின் தேவை கடல் கடந்த தீவுகளுக்கு அவசியம். அத்தோடு அங்கு பணியாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்கின்றனர். அவர்களுக்கு சம்பளம் குறைவாகவே காணப்படுகிறது.

எனவே அவர்களுக்கு ஊக்குவிப்பை வழங்குவதற்காக கொடுப்பனவை வழங்க முடியுமா? இந்தப் பிரச்னைக்கு அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும்-என்றார்.

# மேலும் 912 பேர் குணமடைவு

கொழும்பு, பெப். 10

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 912 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனை அடுத்து நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 65 ஆயிரத்து 53 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 70 ஆயிரத்து 235 ஆக காணப்படுகின்றது.

இதில் 4 ஆயிரத்து 817 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 711 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.

பெப்ரவரி - 10 புதன்கிழமை
சார்வரி வருடம் - தை 28

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 9.00 - 10.30 |
| எமகண்டம் | : | 7.30 - 9.00 |
| திதி | : | சதுர்த்தசி |




**மேடம்**
நம்பிக்கைளான நாள். எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். நல்ல தகவல் அலைபேசி மூலம் வரலாம். புதிய வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

**இடபம்**
யோசித்துச் செயல்பட வேண்டிய நாள். தெளிவாக இருந்தாலும் சுற்றியிருப்பவர்கள் உங்களைக் குழப்புவர். எதுவும் முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள்.

**மிதுனம்**
நட்புவட்டம் விரிவடையும். குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். தொழில் முன்னேற்றத்திற்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள்.

**கடகம்**
எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள். வரவு திருப்தி தரும். பிள்ளைகள் நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம்.

**சிம்மம்**
காலை நேரத்திலேயே கலகலப்பான செய்தி வந்து சேரும் நாள். பெற்றோர் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். எதிர்பார்த்த உதவிகள் எளிதில் கிடைக்கும்.

**கன்னி**
வரவை விடச் செலவு கூடும் நாள். உடன்பிறப்புகள் விலகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. சான்றோர்களின் ஆலோசைன தக்க சமயத்தில் கைகொடுக்கும்.

**துலாம்**
கூடப்பிறந்தவர்களால் கூடுதல் நன்மை கிடைக்கும் நாள். வருமானம் உயரும். உற்சாகமாகப் பணிபுரிவீர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வர்கள்.

**விருட்சிகம்**
நினைத்தது நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரலாம். திடீர் வரவு தித்திக்க வைக்கும். பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்வீர்கள்.

**தனுசு**
மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள். மறக்க முடியாத சம்பவம் ஒன்று நடைபெறலாம். கையிருப்புக் கரையலாம். குடும்பத்தினர்களிடையே விட்டுக்கொடுத்துச்செல்வது நல்லது

**மகரம்**
அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். பெண்வழிப் பிரச்னைகள் நல்ல முடிவிற்கு வரும்.

**கும்பம்**
திருமணத் தடை அகலும் திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடக்கும். உறவினர் கொடுத்துதவ முன்வருவர். தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும்.

**மீனம்**
பக்குவமாகப் பேசிப் பாராட்டுப் பெறும் நாள். பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட பகை மாறும். நினைத்த காரியம் மகிழ்ச்சியை வழங்கும். உடல்நலம் சீராகும்.

# பவித்ராவுக்காக விசேட பூசை

கொழும்பு, பெப். 10

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ள சுகாதார, சுதேச வைத்திய அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, விரைவில் குணமடைய வேண்டும் என்றுப் பிரார்த்தித்து, பெல்லன்வில ரஜமஹா விகாரையில், விசேட போதி பூசை நேற்று இடம்பெற்றது.

அவர் விரைவில் குணமடையவேண்டும் என்று பிரார்த்தித்து, அவர் படித்த பாடசாலையின் பழைய மாணவர் அமைப்பு இந்தப் பூசையை ஏற்பாடு செய்துள்ளது.

# இயற்கை முறையில் மேற்கொண்ட நெற்செய்கை அறுவடை பூநகரியில்

மன்னார், பெப். 10

இயற்கை முறையில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை நேற்று மன்னாரில் அறுவடை செய்யப்பட்டது. மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தினால் இயற்கை முறை விவசாயம் மற்றும் பாரம்பரிய விதை தானியங்களை பாதுகாக்கும் நோக்குடன் இந்த செய்கை அறிமுகம் செய்யப்பட்டது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரியாலை நாகபடுவான் பகுதியில் அந்த நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட பெண்கள், சிறு குழுக்கள் ஊடாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தக் குழுவினால் அப்பிரதேசத்திற்கு ஏற்றதான “பச்சைப்பெருமாள்” எனும் நெல்லினம் 5 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டது. செய்கை பண்ணப்பட்ட நெல் நேற்று அறுவடை செய்யப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது.

# தோட்டத் தொழிலாளர்களை ஒருபோதும் கைவிடமாட்டோம்

## தொழில் அமைச்சர் உறுதி

கொழும்பு, பெப். 10

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை அரசாங்கம் ஒருபோதும் கைவிடாது. அவர்களுக்கான தொழில் சலுகைகள் உறுதிப்படுத்தப்படும் - என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வாக்குகளை மையப்படுத்தி நாம் அரசியல் செய்யவில்லை. கொள்கை அடிப்படையிலேயே தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

கடந்த ஆட்சியின்போது தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. அவர்களுக்கான ஊதிய உரிமை எமது ஆட்சியில்தான் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் நாம் பெருமையடைகின்றோம்-என்றார்.

# ஆளும் தரப்பில் இருந்து விமலுக்கு கடும் எதிர்ப்பு

கொழும்பு, பெப். 10

ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டம் நேற்று இடம்பெற்ற நிலையில், முக்கிய உறுப்பினரான அமைச்சர் விமல் வீரவன்ஸ இக்கூட்டத்தில் பங்கேற்கவில்லை என அறியமுடிந்தது.

அமைச்சர் விமல் கட்சியை விமர்சித்து ஆற்றிய உரை குறித்து, நேற்றைய கூட்டத்தில ஆளும் தரப்பு உறுப்பினர்கள் பலர் கடும் எதிர்ப்பை வெளியிட்டதையடுத்து, உறுப்பினர்களுக்கிடையில் கடும் வாதங்கள் இடம்பெற்றுள்ளன.

எனினும், நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாகவே தான் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்கவில்லை என அமைச்சர் விமல் அறிவித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

# காணாமற்போனவரின் சடலம் நேற்று மீட்பு

கொழும்பு, பெப். 10

மடுல்சீமையிலுள்ள சிறிய உலக முடிவை பார்வையிடச் சென்று காணாமற்போன சிரச தொலைக்காட்சியின் தயாரிப்பாளரான தினுர விஜேசுந்தர சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் விசேட படையணியினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது சடலம் மீட்கப்பட்டுள்ளது. சிறிய உலக முடிவின் பள்ளத்தில் நேற்று அதிகாலை தொடக்கம் தேடுதல் முன்னெடுக்கப்பட்டதாக இராணுவத் தளபதி தெரிவித்தார்.

கற்பாறைக்குள் சிக்குண்டிருந்த நிலையில், தினுர விஜேசுந்தரவின் சடலம் மீட்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன குறிப்பிட்டார்.

ஆறு வைத்தியர்கள் உள்ளிட்ட 12 பேர் கொண்ட குழுவினர் கடந்த 6 ஆம் திகதி உலக முடிவை பார்வையிடச் சென்றிருந்தபோதே தினுர விஜேசுந்தர காணாமல் போயிருந்தார்.

# சட்டக் கல்லூரியில் ஆங்கில மொழியில் விரிவுரை நடத்தும் முடிவை ரத்து செய்க

## அஸ்கிரிய பீடம் வலியுறுத்து



கொழும்பு, பெப். 10

**இலங்கை சட்டக் கல்லூரியில் விரிவுரைகளை ஆங்கில மொழியில் மட்டும் நடத்துவதற்கு எடுக்கப்பட்ட முடிவை திரும்பப் பெறுமாறு அஸ்கிரிய பௌத்த பீடத்தின் தலைமை பதிவாளர் மெதகம தம்மநந்த தேரர் அரசை வலியுறுத்தியுள்ளார்.**

சிங்கள நடுத்தர மாணவர்கள் இந்த முடிவால் கடுமையாக சிரமப்படுவார்கள் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அஸ்கிரிய பௌத்த பீடத்தின் தலைமை பதிவாளர் இதனைத் தெரிவித்தார்.

"சட்டக் கல்லூரியில் சிங்கள மொழியில் விரிவுரை களை நடத்த அரசு தொடர்ந்து அனுமதிக்க வேண்டும் என்று தேரர் குறிப்பிட்டார்.

சிங்கள மொழிமூலம் படித்தவர்கள் எதிர்காலத்தில் சட்டக் கல்லூரியில் கல்வி கற்க வசதியாக ஆங்கில மொழியில் விரிவுரைகளை நடத்தும் முடிவை ரத்துச் செய்யவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.



# விபத்துக்குள்ளாகி தீப்பற்றி எரிந்த கார்

கொழும்பு, பெப். 10

குருநாகல் - ரம்புக்கன பிரதான வீதியில் கட்டுவாப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு கார் ஒன்று விபத்துக்குள்ளாகியது.

குறித்த கார் வீதியிலிருந்து விலகி அங்கிருந்த அதி சக்தி வாய்ந்த மின் கம்பமொன்றில் மோதி தீப்பிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீ விபத்தால் கார் முற்றாக எரிந்துள்ளதுடன், மின் கம்பமும் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

விபத்து நிகழ்ந்த நேரம் மூன்று பேர் காரில் இருந்தனர் எனவும் அவர்கள் மதுபோதையில் வாகனத்தை செலுத்தியுள்ளனர் எனவும் விசாரணையின்போது தெரிய வந்துள்ளது. அவர்களில் இருவரை பொத்துஹெர பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மற்ற சந்தேகநபர் சம்பவ இடத்திலிருந்து தப்பியோடிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# 69000 ரூபாவை இழக்கும் தோட்டத் தொழிலாளர்கள்!

## சூழ்ச்சித் திட்டத்தை அம்பலப்படுத்தினார் சஜித்

கொழும்பு, பெப். 10

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதத்தில் 13 நாட்களே வேலை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இதனால் வருட வருமானத்தில் 69 ஆயிரம் ரூபாவை இழக்கவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு,

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என்ற உறுதிமொழி ஜனாதிபதியால் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் சம்பள நிர்ணயசபை ஊடாக தற்போது அடிப்படைச் சம்பளமாக 900 ரூபாவும், வாழ்வாதார கொடுப்பனவாக 100 ரூபாவும் வழங்கப்படவுள்ளது. இது பெரும் வெற்றி என ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் மார்தட்டுகின்றனர்.

இதற்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக 750 ரூபா வழங்கப்பட்டது. கூட்டு ஒப்பந்தத்தில் ஊடாக வருடம் 300 நாட்கள் வேலை வழங்கப்படவேண்டும் என்ற ஏற்பாடு இருந்தது. இதன் மூலம் வருடாந்தம் 2 லட்சத்து 25 ஆயிரத்தை தோட்டத் தொழிலாளர்கள் உழைத்தனர்.

ஆனால் தற்போது 13 நாட்களே வேலை வழங்கப்படவுள்ளது. வருடத்தில் 156 நாட்கள். அப்படியானால் வருடம் 1 லட்சத்து 56 ஆயிரம் ரூபாவையே அவர்களால் உழைக்க முடியும். இதன்படி 69 ஆயிரம் ரூபாவை அவர்கள் இழக்கின்றனர்.

அதுமட்டுமல்ல கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக தொழிலாளர்களுக்கு 28 சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அவையும் தற்போது இல்லாமல்போகப் போகின்றன. ஆயிரம் ரூபா வழங்குவது நல்லது. அதேபோல் கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்படவேண்டும்-என்றார்.

# மாணவர்களுக்கு புகையிலை விற்பனை செய்த நபர் கைது

கொழும்பு, பெப். 10

பாடசாலை மாணவர்களுக்கு புகையிலை விற்பனை செய்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் காலி - ஹிரிபுர பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது.சந்தேக நபரிடமிருந்து 10 கிராம் புகையிலை அடங் கிய 19 பொதிகளை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலி நகரின் பாடசாலையொன்றில் 14 வயது மாணவனிடமிருந்து 4 கிராம் புகையிலை கைப்பற்றப்பட்டதன் பின்னரே இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண் டனர்.

அதற்கமைய குறித்த சந்நேக நபர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது அவர் புறாக்களை விற்பனை செய்வதாகக் கூறி பாடசாலை மாணவர்களுக்கு புகையிலைப் பொதிகளை விற்பனை செய்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

# மின்சார வேலியில் சிக்கி 8 வயதுச் சிறுவன் பலி!

திருகோணமலை,பெப்.10

திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தனவெட்டைப் பகுதியில் யானைகள் உள்ளிட்ட காட்டு விலங்குகள் நுழைவதைத் தடுக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட மின்சார வேலியில் சிக்குண்ட 8 வயதுச் சிறுவன் ஒருவன் நேற்று உயிரிழந்தார் என சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த சிறுவன் சந்தனவெட்டை திஃமூ ஐங்கரன் வித்தியாலயத்தில் 2 ஆம் தரத்தில் கல்வி கற்று வந்த இந்திரன் ரஜீதன் என சம்பூர் பொலிஸார் கூறினர். சம்பவ இடத்துக்கு வருகை தந்த சம்பூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ)

# வவுனியாவில் 7 வயது சிறுவன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

வவுனியா, பெப். 10

வவுனியா ஓமந்தை காவல்துறை பிரிவிற்குட்பட்ட நவ்வி பகுதியில் 7 வயது பாடசாலை மாணவன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவன் நேற்று முன்தினம் மதியம் 2 மணியளவில் வீட்டில் இருந்து ரியூசன் செல்வதற்காக சென்றுள்ளார். எனினும் நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து அவரை காணவில்லை என ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு அளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர் அயல்வீட்டு கிணற்றில் சடலமாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

குறித்த சிறுவனின் புத்தகபை வீட்டிற்கு அண்மையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ப.அபிசக் என்ற 7 வயதுச் சிறுவனே காணாமல் போயிருந்தார். அவரது தாயார் வெளிநாடொன்றில் வசித்துவரும் நிலையில் தந்தையார் மற்றும் அப்பம்மாவுடன் அவர் வசித்து வந்துள்ளார். சம்பவ தினம் தந்தையார் வீட்டில் இருக்கவில்லை. சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வருக்கு கொரோனா

மொனராகலை,பெப்.10

மொனராகலை விஹாரமுல்ல பிரதேசத்தில் தானம் வழங்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் உட்பட 09 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மொனராகலை பாடசாலை ஒன்றின் மாணவியும் இதில் அடங்குகின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 5 பேர் கொழும்பிலிருந்து வந்து தான நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதனால் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட 12 தேரர்கள் விகாரையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (எ)



# பாகிஸ்தான் தூதுவரை நேற்று அவசரமாக சந்தித்தார் ரிஷாத்

கொழும்பு, பெப். 10

இலங்கை வரவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், சமகால அரசியலில் சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து, அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் பிரதித்தூதுவர் தன்வீர் அஹமட் பெட்டியை நேற்று சந்தித்த இக்குழுவினர், நாட்டில் சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகள், முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவது உட்பட முஸ்லிம்கள் அண்மைக்காலமாக எதிர்கொள்ளும் நெருக்குவாரங்கள் குறித்தும் தூதுவரிடம் எடுத்துக் கூறினர்.

இதுபற்றி கட்சியின் தவிசாளர் அமீர் அலி தெரிவித்ததாவது:

உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) சுகாதார வழிகாட்டலுக்கு இணங்க, உலகத்தின் 190 நாடுகள் கொவிட்19 தொற்றினால் மரணிப்பவர்களுடைய உடல்களை அடக்கம் செய்கின்றன. மாறாக, இலங்கையில் மாத்திரம் கடும்போக்கு கொள்கையுடன், இந்த அரசாங்கம் தொடர்ந்தேர்ச்சியாக, எமது ஜனாஸாக்களை பலவந்தமாக எரித்து வருகின்றது.

இது தொடர்பில், எமக்கு நியாயம் பெற்றுத்தர பாகிஸ்தான் பிரதமரது விஜயம் உதவ வேண்டும். அத்துடன், இலங்கையிலும் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான வழிவகைகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை, அவர் வலியுறுத்த வேண்டும் என்பதுவும் எமது எதிர்பார்ப்பாகும்-என்றார்.

இச்சந்திப்பில் மக்கள் காங்கிரஸின் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் எஸ்.சுபைர்தீன், பொருளாளர் ஹூசைன் பைலா ஆகியோர் உடனிருந்தனர்.

# போராட்டத்தின்போது வேலன் சாமியார் ரிமோட்கொன்ரோலில் இயக்கப்பட்டார்

## சுமந்திரன், சாணக்கியன் பேரணியை முடித்த விதம் பிழையானது என்கிறார் எம்.கே.சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், பெப். 10

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணியில் வேலன் சாமியாரை முன்னிறுத்தி ரிமோட் கொன்ரோலில் போராட்டத்தை நடத்த வெளிநாட்டவர்கள் முயன்றதாலேயே குழப்பம் ஏற்பட்டதாகத் தமிழ் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பலரது பங்களிப்பில் முடிந்த போராட்டத்தை சுமந்திரனும், சாணக்கியனும் முடித்த விதம் பிழையானது என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் அரசின் அடக்கு முறைக்கு மத்தியில் பல்லாயிரக் கணக்கில் திரண்ட மக்களுக்கு நமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியின் அறிவிப்பின் பின்னர்தான் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசியல் கட்சிகள் அதனைத் தெரிந்து கொண்டனர். எமக்கு அறிவிக்கப்படவில்லை. அவசர அவசரமாகத்தான் திட்டமிடப்பட்டது.

பெப்ரவரி 1ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதில் பலர் கலந்து கொண்டோம். சிவில் சமூகம், மதத் தலைவர்கள் எனச் சிலர்தான் கலந்துகொண்டார்கள். பொலிகண்டியில் முடிப்பதென தீர்மானிக்கப்பட்டாலும், ஏற்பாட்டாளர்களுக்கு பொலிகண்டி எங்கேயிருக்கிறதெனத் தெரிந்திருக்கவில்லை.

பருத்தித்துறைக்கும் வல்வெட்டித்துறைக்கு நடுவில்தான் பொலிகண்டி இருக்கிறது என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை.

1985 ஆம் ஆண்டு பொலிகண்டி மேற்கில் இராணுவத்தினால் ஒரு மிகப்பெரிய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. அன்று அதிகாலைதான் ஒரு இராணுவ முகாமுக்கு எதிராக முதலாவது தாக்குதலை ரெலோ இயக்கம் மேற்கொண்டது. கொக்காவில் இராணுவ முகாம் தாக்கப்பட்டது. இதையடுத்து, புலிகள், ரெலோவினரை மடக்க பொலிகண்டி, வல்வெட்டித்துறையில் அதிகாலையிலேயே இராணுவத்தினர் ஒரு பிரமாண்டமான சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது விடுதலைப் புலிகளின் கிரனைட் தாக்குதலில் ஒரு இராணுவ மேஜர் கொல்லப்பட்டார். அவரது உடல் வல்வெட்டித்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதைத் தொடர்ந்து வெறியாட்டம் ஆரம்பமானது.

வீடுகளில் இருந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரும் காட்டுமிராண்டித்தனமாக தாக்கப்பட்டார்கள்.

பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு கை, கால்கள் கட்டப்பட்டு தாய்மார், மனைவிமார் கதறகதற அழைத்துச் செல்லப்பட்டனர். அந்த முற்றுகையில் மயிரிழையில் தப்பிச் சென்றவுடன் அடிப்படையில் அந்த காட்சிகளை நான் கண்டு கொண்டேன். வாய் பேச முடியாதவர்கள் உட்பட 55 இளைஞர்களை கொண்டுவந்து பொலிகண்டி செம்மீன் படிப்பகத்தில் வைத்து இந்தக் கட்டடத்தை இராணுவத்தினர் குண்டு வைத்து தகர்த்தனர்.

மாலை 6 மணிக்கு பின்னர்தான் இராணுவத்தினர் விலகி சென்றனர். அந்த பகுதியில் கை, கால்கள், தலைகள் என உடல் பாகங்கள் சிதறிக்கிடந்தன.

காயமடைந்தவர்களை மீட்டு, இருந்த ஓரிரண்டு மாட்டு வண்டிகளில் ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். அப்போது கடற்படையும் தாக்கினார்கள்.

இனப்படுகொலை வாரம் என ஒவ்வொரு வருடமும் நாம் அஞ்சலி மேற்கொள்ளும் போது அந்தப் பகுதியிலும் நாங்கள் நினைவேந்தலை நடத்தி வருகிறோம். கடந்த ஆண்டும் அங்கு நினைவேந்தல் நடத்தப்பட்டது. அப்போது 5 பேர்தான் அஞ்சலி செலுத்தினோம். புலனாய்வாளர்கள், படையினர் என 40 பேர் சூழ நின்றனர். இதன் காரணமாகத்தான் அந்த இடத்தை நாங்கள் தெரிவு செய்தோம். அந்தக் கூட்டத்திலேயே ஏற்பாட்டாளர்களுக்கு விளக்கமாக கூறினேன்.

பொலிகண்டி கிழக்கு என்பது விடுதலைப்புலிகள், ரெலோவின் படகுகளின் கேந்திர நிலையமாக இருந்தது. தளபதி சூசையின் கேந்திர நிலையமாக அது இருந்தது.

இந்தப் பேரணியில் முக்கியமான விடயம் வெளியிலிருந்து உத்தரவுகள் வழங்கப்பட்டன. சாமியாரை முன்னால்



நிறுத்திவிட்டு பின்னாலிருந்து உத்தரவுகள் வழங்கப்பட்டன. சாமியாரில் இதில் பிழை இல்லை. இதில் அரசியல்வாதிகள் வேண்டாம் என்பது போன்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

மூன்றாம் திகதி பொத்துவிலில் பேரணி ஆரம்பமானபோது பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு செல்லாமல் விட்டிருந்தால் அந்த பேரணி பொத்துவிலோடு முடிந்திருக்கும். அங்கு போன பாராளுமன்ற உறுப்பினர்களை குறை சொல்வது சரியல்ல. அதிலே மிக முக்கியமாக முன்னணியில் சுமந்திரனும் சாணக்கியனும் இருந்திருக்கிறார்கள். அவர்களின் பங்களிப்பைப் புறக்கணிக்க முடியாது.

அவர்களுக்குடன் ஆயிரம் கருத்து வேறுபாடு இருக்கலாம். விமர்சனங்கள் இருக்கலாம். எல்லோரும் சேர்ந்து இதை சாதித்தோம் என்பதை புரிந்து கொள்ளாமல் கருத்து தெரிவிப்பது சரியல்ல.

சில கருத்து வேறுபாடுகள் இருந்தால் அதைப் பேசலாம். தீர்த்துக் கொள்ளலாம். அதை விடுத்து திருகோணமலை சிவன் கோயிலுக்கு முன்னால் வைத்து கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர், இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தன்னிச்சையாக நடந்து கொண்டார்கள் என அறிவிக்கின்றார். எங்கள் வீட்டு பிரச்னையைக்கூட பொதுவெளியில் பேசவேண்டிய அவசியமில்லை. அதன் எதிரொலியாக திருகோணமலையிலிருந்து பேரணியில் சுமந்திரன் கலந்து கொள்ளவில்லை. அவருக்கு வேறு தனிப்பட்ட காரணங்களும் இருந்திருக்கலாம்.

முன்னுக்கு நாங்கள் தான் வரவேண்டும் என சாமியாரை வேள்விக்கு கொண்டு செல்வதைப் போல வளையம் பிடித்துக்கொண்டு கொண்டு சென்றார்கள். இதெல்லாம் தேவையில்லை. அவர்கள் தலைமை தாங்கி முன் செல்லலாம் என்று எங்களுக்கும் உடன்பாடு இருந்தது. முதலில் மதத்தலைவர்கள், பின்னால் பல்கலைக்கழக மாணவர்கள், பின்னால் சிவில் சமூகத்தினர், பின்னால் அரசியல்வாதிகள் என கூறினார்கள்.

நான் ஒன்றை தெளிவாக கூறுகிறேன். அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லாமலிருந்தால் இந்த வெற்றியை அடைந்திருக்க முடியாது. இது தனிப்பட்டவர்களின் வெற்றியல்ல. எல்லோரும் இணைந்த இனத்தின் வெற்றி. இதைப் புரிந்து கொள்ளாமல் அவர் வேண்டாம், இவர் வேண்டாம் எனச் சொல்ல முடியாது. தனிப்பட்ட கட்சி பிரச்னைகளை வேறு இடங்களில் வைத்துக் கொள்ளுங்கள்.

பிற்பகல் 3 மணியளவிலேயே ஆலடியா, செம்மீன் படிப்பகமா என்ற பட்டிமன்றம் ஆரம்பித்ததாக தகவல் வந்ததும், நான் பலரை தொடர்பு கொண்டு மாற்று யோசனைகளைச் சொன்னேன்.

அடிக்கல் நாட்டுவதெல்லாம் திட்டத்தில் இருக்கவில்லை. திடீரென செய்யப்பட்ட ஏற்பாடு.

ஆனால், சுமந்திரனும், சாணக்கியனும் அதில் போராட்டத்தை முடித்து வைப்பதைப்போல நடந்துகொண்ட விதம் பிழையானது. பொலிகண்டி ஆலடியில் மக்கள் வற்புறுத்தியிருக்கலாம். ஆனால், தலைவர்கள் தலைமை தாங்கிச் சரியான வழிகாட்ட வேண்டும். ஆனால் அப்பொழுது தலைமைத்துவம் இல்லாமல் போய்விட்டது. நான் திக்கம் சந்திக்கு போய்க்கொண்டிருந்தபோது, சுமந்திரனும், சாணக்கியனும் நிகழ்ச்சியை முடித்து விட்டதாக செய்தி வந்தது.

பின்னர் சாமியார் அங்கு வந்து, பிரகடனம் வாசித்து முடித்து வைக்கப்பட்டது.

சாமியாரும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்க தலைவி லீலாவதியும் உரையாற்றிய போது அரசியல் தலைவர்கள் சரியாக நடக்கவில்லையென்றார்கள். எங்கள் எல்லோருடைய பங்களிப்பில் வந்து விட்டு, இப்படியான கருத்துக்களை கூற முடியாது-என்றார். (அ)

---

# காங்கேசன் சிமெந்து ஆலை குறித்து ஆராய்வதற்கு ஐவர் அடங்கிய குழு

கொழும்பு, பெப். 10

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு அறிக்கையை தாக்கல் செய்ய ஐவர் அடக்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிமெந்து தொழிற்சாலை வளாகத்தில் சிமெந்து உற்பத்தி கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைவாக அங்கிருக்கும் பயன்பாட்டுக்கு உதவாத பொருட்களை அகற்றி வளாகத்தை துப்பரவு செய்வதற்கு ஏற்ற நடவடிக்கையை எடுப்பதற்கான பரிந்துரைகளை வழங்கவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஐவரடங்கிய குழு வழங்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் பயன்பாட்டுக்கு உதவாத பொருட்களை அங்கிருந்து அகற்ற கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# சீன, ரஷ்ய தடுப்பூசிகளுக்கான அனுமதியில் இழுபறி நிலைமை

கொழும்பு, பெப். 10

சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் தயாரித்துள்ள கொரோனா தடுப்பூசிக்கு அங்கீகாரம் வழங்க மேலதிக விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

சீனாவின் சினோபோர்ம் மற்றும் ரஷ்யாவின் ஸ்பூட்னிக் வி ஆகிய இரண்டு தடுப்பூசிகளை மதிப்பாய்வு செய்யும் பணியை கடந்த வாரம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தொடங்கியுள்ளது.

இந்நிலையில் அந்தந்த நாடுகளிடமிருந்து மேலதிக விவரங்களை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கோரியுள்ளது என ஐ.டி.எச். வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

300,000 டோஸ் சினோபோர்ம் தடுப்பூசியை வழங்க சீனா ஒப்புக் கொண்டுள்ள அதேவேளை ரஷ்யாவும் தங்கள் தடுப்பூசியை இலங்கையுடன் பகிர்ந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் குறித்த இரு நாடுகளின் கொரோனா தடுப்பூசிக்கும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசாங்கத்திலிருந்து உடனே விமல் வெளியேற வேண்டும்!

## இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து



**கொழும்பு,பெப்.10**

**விமல் வீரவன்ஸவை அரசாங்கத்திலிருந்து வெளியேற்றுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான நிமல் லான்சா வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் தலைமைத்துவம் தொடர்பில் கருத்து வெளியிடு வதற்கு விமல் வீரவன்ஸவுக்கு எவ்வித அருகதையும் கிடை யாது. அவர் அவரின் கட்சி விவகாரத்தை பார்த்துக்கொள் ளட்டும். எமது பிரச்னைகளை நாம் பார்க்கின்றோம்.

அரசாங்கத்தில் இருந்தால் கூட்டு பொறுப்பு இருக்க வேண்டும். அதனைவிடுத்து வீண் பிரசாரங்களை செய்வ தனை ஏற்கமுடியாது. அவ் வாறு செய்வதாக இருந்தால் அரசாங்கத்தில் இருந்து வெளியேறி, எதிரணியில் அமர்ந்து அவர் அதனை செய்யட்டும். விமல் வீரவன்ஸ என்ற நபரை அரசாங்கத்திலி ருந்து வெளியேற்ற வேண்டும்- என்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைப்பதவி யிலிருந்து மஹிந்தவை நீக்கி விட்டு, அப்பதவி கோட்டாபய வுக்கு வழங்கப்படவேண்டும் என விமல் வீரவன்ஸ தெரிவித்த கருத்து தற்போது பெரும் சர்ச்சையை கிளப்பிவிட்டுள் ளது.

(அ)

# ஊடகத் தணிக்கை திட்டம் ஏதுமில்லை

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்



கொழும்பு, பெப். 10

இலங்கையில் ஊடகங் களைத் தணிக்கை செய்யும் எந்த நடவடிக்கையும் இல்லை என அரசாங்கம் தெரிவித் துள்ளது.

இந்நிலையில், ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்களின் கட்டுப்பாடு மற்றும் தணிக்கை தொடர்பான கூற்றுக்கள் தவ றானவை என அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் அமைச் சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்று ஊடகங்களிடம் தெரித்தார்.

இதேவேளை, செய்தி வெளி யீடுகளில் ஒரு சார்பு அறிக்கை மற்றும் நியாயமற்ற விடயங் களுக்குத் தீர்வு காண மட்டுமே விவாதங்கள் நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

ஊடகங்கள் மிக முக்கிய மானதுறை என்றும், ஊடக பணியாளர்கள் ஒரு நாட்டில் மிகுந்த நம்பிக்கையுடனும் மரியாதைக்குரியவர்களாகவும் உள்ளனர் என்றும் அவர் விளக் கினார்.

அவர் மேலும் தெரிவிகை யில்-

ஊடகங்களில் தெரிவிக்கப் படுவதை மக்கள் நம்புகிறார் கள். எனவே, பொதுமக்களின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம்.

ஊடகங்கள் தொடர்பாக ஏதேனும் விதிமுறைகள் கொண்டுவரப்பட்டால், அது ஊடக ஊழியர்களைப் பாது காப்பதும், சில ஊடகங்கள் வழியாக பக்கச்சார்பான ஊடக அறிக்கைகள் வெளியிடப்படுவ தைத் தடுப்பதுமாகவே அமையும்.

அத்துடன், சார்பு அறிக்கை யிடலில் கவனம் செலுத்தும் ஊடக நிறுவனங்கள் தங்களது சொந்தப் பார்வைகள் மற்றும் சந்தேகங்களின் அடிப்படையி லேயே செயற்படுகின்றன.

அரசாங்கம் உள்ளடக்குத லில் கவனம் செலுத்துகிறது மற்றும் பல்வேறு பங்குதாரர் கள் உட்பட அனைவரின் பார்வைகளையும் பெற ஆர்வ மாக உள்ளது.

இதனிடையே, தற்போது, ஊடகங்கள் குறித்து பொது மக்களுக்கு மிகவும் மோசமான கருத்து உள்ளது. இதை சரி செய்ய வேண்டும். ஊடகங்கள் மீது மரியாதை இருக்க வேண்டும்.

ஊடகங்களை ஒழுங்குபடுத் துவதற்கும், வழிப்படுத்துவதற் கும் ஒரு திட்டத்தை வகுப்ப தற்கு விவாதங்கள் நடந்து வரு கின்றன. இந்த நாட்டின் குடி மக்களின் அடிப்படை உரிமை களைப் பாதுகாப்பது ஊடக அமைச்சின் பொறுப்பாகும்.

பொதுமக்கள் தங்கள் குற்றச் சாட்டுகளுக்கு குரல் கொடுக்க வும், நீதி தேடவும் நாங்கள் ஒரு வாய்ப்பை வழங்கவேண்டும்- என்றார்.

(அ)

# சுற்றுலாத்துறையின் மூலம் அரசு 1 பில்லியன் டொலர் ஈட்ட திட்டம்

கொழும்பு, பெப். 10

சுற்றுலாத்துறையின் மூலம் இந்த வருடம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை வரு மானமாக ஈட்ட திட்டமிட்டு செயற்படுமாறு பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செய லணியின் தலைவர் பஸில் ராஜ பக்ஷ சுற்றுலாத் துறை அதி காரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

சுற்றுலாத்துறையின் அபிவி ருத்தி தொடர்பாக அதன்



அதிகாரிகளுடனான கலந்துரை யாடல் நேற்று முன்தினம் திங் கட்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றுகையி லேயே அவர் இதனைத் தெரிவித்தார். சுற்றுலாத்துறை யில் ஈடுபடும் அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதில் அரசாங் கம் கவனம் செலுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தேசிய பொருளா தாரத்தை கட்டியெழுப்புவதற் காக ஏற்றுமதியின் மூலம் பெறும் வருமானம் மாத்திரம் போதுமானதல்ல என்றும், எனவே தேசிய பொருளாதா ரத்தைக் கட்டியெழுப்ப சுற்று லாத்துறையின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)



# இலங்கை வரும் இம்ரான் கான் பாராளுமன்றில் விசேட உரை!

கொழும்பு, பெப். 10

இலங்கைக்கு உத்தியோக பூர்வ பயணம் மேற்கொள்ள வுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், இலங்கை பாராளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

கட்சித் தலைவர்கள் கூட்டத் தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இந்த விடயத்தை உறுதிப்படுத்திக் கூறினார் என்று தமிழ் முற் போக்குக் கூட்டணியின் தலை வரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பிரதமர் இம் ரான் கான், எதிர்வரும் 22ஆம் திகதி இரண்டு நாட்கள் உத்தி யோகபூர்வ பயணம் மேற் கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ, வெளிவிவகார அமைச் சர் தினேஷ் குணவர்தன ஆகி யோரையும் அவர் சந்தித்து, இரு தரப்புப் பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று பரவ ஆரம் பித்த கடந்த ஓராண்டு காலப் பகுதிக்குள், நாட்டுக்கு வருகை தரும் முதலாவது வெளிநாட்டு அரச தலைவராக இம்ரான் கான் வரலாற்றில் இடம்பிடிக் கின்றார்.

இலங்கை, பாகிஸ்தானுடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வரும் அதேவேளை, இந்திய - பாகிஸ்தான் அமைதி யின்மை குறித்து, கருத்துக்களை வெளியிடுவதிலிருந்து இலங்கை விலகியுள்ளது எனத் தெரிவிக் கப்படுகின்றது.

# ஆசிரியர்களுக்கு மாத இறுதியில் கொரோனா தடுப்பூசி ஏற்றப்படும்

## கல்வி அமைச்சர் பீரிஸ் தகவல்



கொழும்பு, பெப். 10

இந்த மாத இறுதி அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித் துள்ளார்.

ஒரே தடவையில் நாடளா விய ரீதியில் அனைத்து ஆசிரி யர்களுக்கும் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுப்பது சாத்தியப் படாது என்பத னால் கட்டம் கட்டமாக அவர்களுக்கு தடுப் பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச் சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் விடயத் திற்கு பொறுப்பான செயலணி யின் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான லலித் வீரதுங்கவிடம் பேச்சு நடத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அமைச் சர், அதற்கி ணங்க கொரோனா வைரஸ் தொற்றி லிருந்து ஆசிரியர்களை பாதுகாக்கும் வகையில் தடுப் பூசிகளை வழங்கும் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

அது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்-


ஆசிரியர்களுக்கு கண்டிப் பாக கொரோனா வைரஸ் தடுப் பூசிகள் வழங்கப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அவர்கள் சமூகத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர்கள்.

அதனைக் கருத்திற் கொண்டே கல்வியமைச்சு அவர்களுக்கு தடுப்பூசிகளை பெற்றுக் கொடுப் பது தொடர்பில் ஜனாதிபதியின் ஆலோசகருடன் பேச்சு நடத்தி யது.

ஒரே தட வையில் ஆசிரி யர்களுக்கு தடுப் பூசிகளை வழங்கு வது சாத்தியமற்றது. எனினும் பெப்ரவரி இறுதிப்பகுதி அல்லது மார்ச் முதல் பகுதியில் ஆசிரியர்களுக்கு தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டும் என்பதை அவர் உறுதியாக தெரிவித்தார்-என்றார்.

ஈழநாடு
Online
சம்பவங்கள், செய்திகள் உடனுக்குடன் அறிந்துகொள்ள...
www.eelanadu.lk






# புனரமைப்பின்றி கிடக்கிறது ஆயிரம் ஆண்டு பழமையான அநுராதபுரம் காளி கோவில்!

## கண்ணெடுத்து பார்க்குமா புனரமைக்குமா தொல்பொருள் திணைக்களம்?

**என்.கே.எஸ்.திருச்செல்வம்**
*வரலாற்று ஆய்வாளர்*

ஒரு தடவை அநுராதபும் புனித நகரத்திற்குச் சென்றபோது மிகவும் மோசமான, அவல நிலையில் கவனிப்பாரற்று கிடந்த பண்டைய காளி கோயிலின் இடிபாடுகளைக் கண்டேன். இந்தக் கோயில் சுமார் 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும்.

அநுராதபுரம் புராதன நகரின் மத்தியில், தூபராம தாதுகோபத்திலிருந்து அபயகிரி தாதுகோபத்திற்கு செல்லும் வழியில் பாதையின் இடது பக்கத்தில் இந்தக் காளி அம்மன் கோயில் அமைந்திருந்தது. தூபராம தாதுகோபத்தின் வடக்கு திசையில் 500 மீற்றர் தொலைவில் வீதியின் இடது புறத்தில் இக்கோயிலின் இடிபாடுகள் காணப்படுகின்றன. இவ்வீதி முன்பு வை வீதி என அழைக்கப்பட்டது.

புராதன அநுராதபுர கோட்டையின் மேற்கு வாசலுக்கு நேராக இவ்வாலயம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அகழியாலும், அரணாலும் சூழப்பட்ட கோட்டைப் பகுதியில் முதலாம் விஜயபாகு மன்னனின் அரண்மனையின் இடிபாடுகளும்கெடிகே, தலதாமாளிகை போன்றவற்றின் எச்சங்களும் காணப்படுகின்றன. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அநுராதபுர கோட்டையின் மேற்கு வாசற் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது ஆய்வாளர் H.C.B. பெல் அவர்களால் இங்கிருந்த இந்துக் கோயிலின் இடிபாடுகளும், சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த இடிபாடுகளுக்கு மத்தியில் அழகிய அம்மன் விக்கிரகம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது. இச்சிலை மகிஷவர்த்தினியின் தோற்றத்தை உடையதாகும். அநுராதபுரம் காளி கோயிலில் கண்டெடுக்கப்பட்ட இந்த மகிஷவர்த்தினி அம்மன் சிலை இலங்கையில் கிடைக்கப்பெற்ற தெய்வச் சிலைகளிலேயே மிகவும் உன்னதமானதும், அழகிய வடிவமைப்பையும் கொண்டதாகும். எட்டு கைகளையுடைய இந்த அம்மன் சிலை ஒரு செங்குத்தான நீள் வட்டக்கல்லில் புடைப்புச்சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. அம்மனின் முகத்தில் மூக்குப்பகுதி சற்று சிதலமடைந்து காணப்படுகின்றது.

மேலும் சிலையின் அடியில் கணுக்கால் பகுதி முற்றாக வெடித்து சிலை இரண்டு துண்டுகளாகக் காணப்படுகிறது. வெடித்த பகுதி சிலையுடன் சேர்த்து ஒட்டவைத்து



முழுமையாக்கப்பட்டுள்ளது.

அம்மனின் எட்டுக் கைகளிலே மேற்பகுதியிலுள்ள கைகள் சங்கும், கதாயுதமும் ஏந்திய வண்ணம் உள்ளன. அடுத்த இரண்டு கைகளில் வாளும், வில்லும் காணப்படுகின்றன. அடுத்த இரண்டு கைகளில் உள்ள ஆயுதங்கள் உடைந்திருக்கலாம் எனத் தெரிகிறது. இக்கைகளில் திரிசூலமும், ஈட்டியும் இருந்திருக்க வேண்டும். கீழே உள்ள கைகளில் இடது கையில் பெரிய கத்தியை நிலத்தில் ஊன்றிய வண்ணமும், வலது கையை இடுப்பில் வைத்தவாறும் செதுக்கப்பட்டுள்ளது.

தலையிலே கிரீடமும், காதுகளில் வளையமும், தோள்களிலே அம்புக் கூடையும், கழுத்திலே மணிமாலைகளும், மார்பிலே ஆடை அணிகளும், கைகளிலே வளையல்களும், இடையிலே ஒட்டியாணமும், இடுப்பிலே கச்சையும், கால்களிலே சிலம்பும் அணிந்த வண்ணம் வடிவமைக்கப்பட்ட இத்தனை நேர்த்தியான புராதன சிலையை இலங்கையில் வேறு எங்கும் காண முடியாது. இப்படிப்பட்ட அழகிய, நேர்த்தியான மகிஷவர்த்தினியின் சிலை கொழும்பு தேசிய நூதன சாலையை அலங்கரிக்கும் அதேவேளை, இச்சிலை யைப் பாதுகாத்த கோயில் கவனிப் பாரின்றி பற்றைகள் வளர்ந்து கற்தூண்கள் அங்கொன் றும், இங்கொன்றுமாக வீசப் பட்டு அவல நிலையில் காணப்படுகின்றது.

இந்த மகிஷவர்த்தினியின் உருவம் நானாதேசிக வணிகர்களின் வணிக முத்திரையிலும் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நானாதேசிக வணிகர்கள் அநுராதபுரத்தில் அரச செல்வாக்குப் பெற்று விளங்கியிருந்தபடியால், இவர்களின் வர்த்தக நகரங்கள் அநுராதபுரத்தின் பிரதான பௌத்த விகாரைகளுக்கு சமீபத்தில் உருவாக்கப்பட்டிருந்தன. இவர்களின் குலதெய்வமான பரமேஸ்வரியின் வடிவமே மகிஷவர்த்தினி என்பதால் இந்த அம்மனை மூலமூர்த்தியாகக் கொண்ட ஆலயத்தை இவ்விடத்தில் அமைத்திருந்தனர். இவ்வாலயம் பொலநறுவைக் காலத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

தூபராம தாதுகோபத்திற்கு செல்லும் வழியில் இந்த ஆலயம் அமைந்திருந்ததால், தாதுகோபத்தை தரிசிக்க வரும் மக்கள் அதிகமாகக் கூடும் இட மான இப்பகுதியில் வணிகர்களின் விற்பனை நிலையங்கள் இருந்த இடத்திற்கு அருகிலேயே அவர்களால் அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டிருந் தது என்று ஊகிக்கக் கூடியதாக உள்ளது. இந்த அம்மன் ஆலயம் கர்ப்பக் கிருகம், அந்தராளம், மண்டபம் போன்ற பகுதிகளைக் கொண்டிருந் தது.

20 தூண்கள் கூரையைத் தாங்கி யிருந்தன. கோயில் பிரகாரத்தின் மதில்கள் செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன. பராக்கிரமபாகு மன்னனின் மனைவியான லீலாவதி தனது ஆட்சியின் போது அநுராதபுரத்திலுள்ள தூபிகளைத் தரிசிக்க வரும் மக்களுக்கு அன்னதானம் வழங்குவதற்காக ஓர் தானசாலையை அமைத்தாள்.

> **அகழியாலும், அரணாலும் சூழப்பட்ட கோட்டைப் பகுதியில் முதலாம் விஜயபாகு மன்னனின் அரண்மனையின் இடிபாடுகளும் கெடிகே, தலதா மாளிகை போன்றவற்றின் எச்சங்களும் காணப்படுகின்றன.**

இதற்கு வேண்டிய அரிசி முதல் சரக்குகள் போன்ற பொருட்களை பெறுவதற்காக “பலவலவி மேதாவி” என்னும் மடிகையினை தானசாலைக்கு அருகில் நானாதேசிக வணிகரைக் கொண்டு அமைப்பித்தாள். இத்தானம் பற்றிய லீலா வதியின் கல்வெட்டு ஒன்றும் கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் மூலம் அநுராத புரத்தில் தமிழ் நானாதேசிக வணிகர்கள் அரச ஆதரவுடன் விற்பனை மையங்களை அமைத்து வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது நிரூபணமாகிறது.


இந்த வணிகர்களால் தமது விற்பனை நிலையங்களுக்கருகில் ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இவ்வம்மன் ஆலயத்தைத் தவிர வேறு பல ஆலயங்களும் இவர்களால் அநுராத புரத்தில் அமைக்கப்பட்டி ருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன.

அநுராதபுரத்தில் உள்ள பண்டைய பௌத்த வழிபாட்டிடங்கள் எல்லாம் புனரமைக்கப்பட்டு மக்களால் வழிபடப்படுகின்றன. ஆனால், இந்தக் காளி கோயில் புனரமைக்கப்படவில்லை. கண்கொண்டு பார்க்க முடியாத அவல நிலையில் இக் கோயில் காணப்படுவது மனதுக்கு வேதனையை அளிக்கிறது.



# புவி வெப்பமடைதல் ஏன் காலநிலை மாற்றமானது?




**நாராயணி சுப்பிரமணியன்**

**வீ**ட்டுக்கு வெளியே பனி பெய்கிற புகைப்படத்தைப் பகிர்ந்துவிட்டு, "ஏதோ புவி வெப்பமடைதல் என்று சொல்லிக்கொண்டிருந்தீர்களே, எங்கே அது?!" என்று யாராவது ருவிட்டரில் கேள்வி எழுப்புவார்கள். பல்லாயிரக்கணக்கானோர் "மிகவும் சரி", "அட, ஆமாம்ல" என்றெல்லாம் பின்னூட்டம் இடுவார்கள். அந்த ருவீட் வைரலாகும். மேலைநாடுகளின் குளிர்காலங்களில் அடிக்கடி நடக்கும் நிகழ்வு இது. ருவிட்டரின் செல்லப்பிள்ளையான முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூட இப்படி ஒரு ருவீட்டை சில வருடங்களுக்கு முன்பு பதிவிட்டிருந்தார்.

காலநிலை மாற்றம் சார்ந்த விவாதங்களிலும், "புவி வெப்பமடைகிறது என்று சொல்கிறீர்கள். ஆனால், புயல் வந்துவிட்டால் உடனே குத்துக்கரணம் அடித்து, அதுவும் காலநிலை மாற்றம்தான் என்கிறீர்கள். வெப்பமடைந்த பூமியில் மழையும் புயலும் எப்படி வரும்?" என்ற கேள்வி அடிக்கடி வரும்.

மேலோட்டமாகப் பார்த்தால், சரியான கேள்விகளாகவே இவை தெரிகின்றன, இல்லையா? ஆனால், பதில்களை நாம் புரிந்துகொண்டால் அந்த எண்ணம் மாறலாம்.

பசுமைக்குடில் வாயுக்களின் அளவு அதிகரிப்பதால் புவியின் சராசரி வெப்பநிலை அதிகரிக்கிறது. ஆனால், பிரச்னையின் நீள அகலம் அது மட்டுமே இல்லை. புவி வெப்பமடைதல் என்பது ஒரு ஆரம்பப்புள்ளி மட்டுமே. 'அபூர்வ சகோதரர்கள்' திரைப்படத்தில் ஒரு சிறிய பந்தை உருட்டிவிட்டதும் என்னென்னவெல்லாமோ நடந்து இறுதியில் அம்பு ஒன்று விடுவிக்கப்படும் இல்லையா? புவி வெப்பமடைதல் அந்தச் சிறிய பந்து போல, அவ்வளவுதான். பிரச்னையின் தாக்கம் எங்கெங்கோ நீள்கிறது.

இந்தக் குழப்பத்துக்கு முடிவு கட்டிவிடலாம் என்றுதான் 'புவி வெப்பமடைதல்' (Global Warming) என்பது 'காலநிலை மாற்றம்' (Climate Change) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. சரியாகக் கணிக்க முடியாத அதிதீவிர பருவகால நிகழ்வுகள், காலநிலை மாற்றத்தால் இடம்பெயரும் வனவிலங்குகள், உயரும் கடல்மட்டம், உருகும் பனிப்பாறை, மழை, வெள்ளம், வறட்சி, திடீர் பனிப்பொழிவு, காட்டுத்தீ என்று புவி வெப்பமடைதலால் ஏற்படக்கூடிய எல்லா பாதிப்புகளையும் உள்ளடக்கியதுதான் காலநிலை மாற்றம்.

சரி, அப்படிப்பார்த்தாலும் கேள்விகளுக்கான பதில் பாதிதானே கிடைத்திருக்கிறது? இதன் பெயர் காலநிலை மாற்றம் என்றே வைத்துக்கொள்ளலாம், ஆனாலும் வெப்பமடைந்த பூமிதானே இதன் அடிப்படை? வெப்பம் அதிகமானால் எப்படி மழை அதிகரிக்கும்?

வெப்பநிலை அதிகரிக்கும்போது, நீர் ஆவியாக மாறுவதும் அதிகரிக்கிறது. தவிர, வெப்பமான காற்றால் அதிக ஈரப்பதத்தை சேமித்துக் கொள்ள முடியும். சராசரி வெப்பநிலை ஒரு பாகையால் அதிகரித்தால், அந்தச் சூழலில் காற்றுக்குள் 7 வீதம் ஈரப்பதத்தைக் கூடுதலாக சேமிக்கலாம். ஆகவே, காற்றின் சராசரி வெப்ப நிலை அதிகரிக்கும்போது, அதற்குள் சேகரிக்கப்படும் ஈரப்பதமும் அதிகரிக்கிறது. இதனால் மழைப்பொழிவின் அளவும் அதிகரிக்கிறது.

ஆனால், வெப்பம் அதிகமான இடத்துக்குள்ளேயே மழை பொழியும் என்று சொல்லிவிடமுடியாது. அந்த மழை எங்கே, எப்போது போய்ச் சேரும் என்பதெல்லாம் மற்ற பருவகால சூழல்களைப் பொறுத்தது.

காலநிலை மாற்றத்தால் ஒரு வருடத்தின் சராசரி மழை நாள்கள் குறைகின்றன என்பது உண்மைதான். ஆனால், ஒருவேளை மழை தொடங்கிவிட்டால் அது தீவிரமானதாகவே இருக்கும் என்பது விஞ்ஞானிகள் கருத்து.

இப்போதே "வரலாறு காணாத மழை அளவு" போன்ற விவரணைகளைக் கேட்கத் தொடங்கிவிட்டோம். ஒரு வருடத்துக்கான மொத்த மழை அளவை இரண்டு நாள்களிலேயே பார்த்துவிட்ட ஆபிரிக்க நாடுகளும் சமகால வரலாற்றில் உண்டு.

இதில் இன்னொரு பிரச்னையும் இருக்கிறது, மழைக்கான முன்தயாரிப்புகள், மேலாண்மைத் திட்டங்கள் எல்லாமே சராசரி மழை அளவின் அடிப்படையில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. எதிர்பார்க்காமல் வரும் மழை பெரிய அளவில் கொட்டித் தீர்க்கும்போது அதற்கான முன்னேற்பாடுகள் நம்மிடம் இல்லாமல் போகலாம், அதனாலும் பாதிப்புகள் அதிகமாகலாம். மழை மட்டுமல்ல, காலநிலை மாற்றத்தால் வரும் பருவகால நிகழ்வுகள் எல்லாமே எளிதில் கணிக்கமுடியாதவை, தீவிரமானவை. இவற்றை "Unpredictable extreme weather events" என்கிறார்கள் வல்லுநர்கள்.

### இது ஏன் நிகழ்கிறது?

சீட்டுக்கட்டு கோபுரம் ஒன்று சரிகிறது என்று வைத்துக் கொள்வோம். மேலே இருக்கிற ஒரு சீட்டை சரித்தால், அந்தக் கோபுரம் எப்படியெல்லாம் சரியும் என் பதைத் துல்லியமாகக் கணிக்க முடியுமா? சில சீட்டுக்கள் தட்டையாக இருக்கலாம், சில வளைந்திருக்கலாம். சில அடுக்குகள் சரியாகவும் சில அடுக்குகள் மோசமாகவும் அமைக்கப்பட்டிருக்கலாம். கோபுரம் சரியத் தொடங்கும்போது காற்று வீசலாம். திடீரென்று யாராவது கோபுரத்தைக் காப்பாற்றுவதற்காகக் கையை நீட்டி இன்னும் சில சீட்டுக்களைத் தட்டிவிடலாம். எது வேண்டுமானாலும் நிகழலாம்.

காலநிலை மாற்றமும் அதுபோன்றதுதான். காலநிலை என்பது ஒரு உலகளாவிய வலைப்பின்னல் என்பதால் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பருவகால நிகழ்வுகளும் தீவிரமானவையாகவும், எளிதில் கணிக்க முடியாதவையாகவும் இருக்கின்றன.

உதாரணமாக, நீராவியை எடுத்துக்கொள்வோம். வெப்பம் அதிகமானால் நீர் ஆவியாகும். இது நம் எல்லாருக்கும் தெரிந்ததுதான். வெப்பமான காற்று அதிக நீராவியை/ ஈரப்பத்தை சேமிக்கும் என்பதை ஏற்கெனவே பார்த்தோம். ஆகவே வெப்பத்தால் கூடுதல் நீர் ஆவியானாலும், அது வேறு எங்கும் போகாமல் காற்றுக்குள்ளேயே சேமிக்கப்படுகிறது.

நீராவிக்குப் பசுமைக்குடில் விளைவை ஏற்படுத்தும் தன்மை உண்டு. அதுதான் சிக்கலே. காற்றுக்குள் சேர்கிற நீராவி, பசுமைக்குடில் விளைவால் காற்றின் வெப்பத்தை மேலும் அதிகப்படுத்துகிறது. கூடுதலாக சூடேறிய காற்றால் இன்னும் கொஞ்சம் நீர் ஆவியாகிறது. ஆவியாகிற நீர் காற்றின் வெப்பத்தை தொடர்ந்து அதிகரிக்கிறது. மீளா சுழற்சி.

இன்னும் ஒரு தலைசுற்றும் உதாரணத்தைப் பார்க்கலாம். கரியமில வாயு, மீத்தேன் போன்ற பசுமைக்குடில் வாயுக்கள் அதிகரிப்பதால் வெப்பம் கூடுகிறது. அதனால் ஆர்ட்டிக் பனிக்கட்டிகள் உருகுகின்றன. ஆர்ட்டிக் பனிக்கட்டிகளுக்குள் மீத்தேனும் கரியமில வாயுவும் சேமிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பனிக்கட்டிகள் உருகும்போது, உள்ளே அடைபட்டிருக்கிற மீத்தேனும் கரியமில வாயுவும் வெளியேறுகின்றன. அவை காற்றில் கலந்து, மேலும் வெப்பத்தை அதிகரிக்கின்றன. அதனால் பனிக்கட்டிகள் மேலும் உருகுகின்றன!

இவைபோன்ற பல பின்னூட்டச் சுழல்கள் (Feedback loops) காலநிலையில் உண்டு என்பதால், எந்த மாற்றம் எந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மிகச்சரியாகச் சொல்வது கடினம். ஒரு புயலையோ வறட்சியையோ சுட்டிக்காட்டி,"இந்த நிகழ்வுக்குக் காலநிலை மாற்றம் காரணமா?" என்று கேட்டால் குழப்பமான பதிலே மிஞ்சும். ஏற்கெனவே சொன்னதுபோல் காலநிலை மாற்றம் என்பது நுணுக்கமானது. "குற்றம் நடந்தபிறகு ஒரு இடத்துக்குப் போய் பூதக்கண்ணாடியோடு தேடினால் காலநிலை மாற்றம் என்ற துப்பு கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கிறீர்களா என்ன? காலநிலை மாற்றம் என்பது தனிப்பட்ட குற்றவாளியல்ல, தொடர்ந்து நம்மைச் சுற்றி இயங்கும் வலைப்பின்னல்" என்கிறார் ஆராய்ச்சியாளர் டேவிட் வாலஸ் வெல்ஸ்.

சில நிகழ்வுகளுக்கு அது ஆரம்பப்புள்ளி, சில நிகழ்வுகளுக்கு அது ஒரு வேகமூட்டி. ஆனால் வழக்கமான பருவகால நிகழ்வுகள்கூட காலநிலை மாற்றத்தின் பின்னணியில்தான் நடக்கின்றன என்பதால் எல்லாவற்றிலும் அதன் நிழல் படிந்திருக்கிறது.

ஐ.நா. சபையின் சுற்றுச்சூழல் குழு 2020-ன் இறுதியில் உலகளாவிய கணக்கெடுப்பு ஒன்றை நடத்தியது. ஐம்பது நாடுகளைச் சேர்ந்த 12 லட்சம் பேர் இதில் பங்கேற்றார்கள். காலநிலை சார்ந்த கருத்துகள் மக்களிடம் கேட்டறியப்பட்டன. கணக்கெடுப்பில் கிட்டத்தட்ட 63வீதம் பேர், "காலநிலை மாற்றம் என்பது உலகளாவிய அவசரநிலை (Global emergency)" என்று சொல்லியிருக்கிறார்கள்.

இது அவசரநிலை என்பதுதான் நிதர்சனமான உண்மை.



# காதலர் தினத்தன்று களியாட்டம் வேண்டாம்

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,பெப்.10

சுகாதார ஆலோசனைகளை மீறி காதலர் தினக்களியாட்டங்களை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறான களியாட்ட நிகழ்வுகளை நடத்துபவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண எச்சரித்துள்ளார்.

கடந்த சில நாள்களில் விருந்துபசார மற்றும் திருமண நிகழ்வுகளிலேயே அதிக கொரோனா தொற்று நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று குறிப்பிட்ட அவர் சமூக வலைத்தளங்களின் ஊடகவே பல்வேறு களியாட்ட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதனால் காதலர் தினம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சுகாதார அதிகாரிகள் அனுமதியின்றி களியாட்டங்கள் மற்றும் விருந்துபசாரங்களை முன்னெடுப்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது- என்றார். (எ)

# கொரோனா வைரஸ் தொற்றால் பொலிஸ் அதிகாரி உயிரிழப்பு

மொனராகலை,பெப்.10

மொனராகலை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தார்.

பொலிஸ் திணைக்களத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த முதல் அதிகாரி இவர் தான் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

59 வயது பொலிஸ் அதிகாரியே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்த பொலிஸ் அதிகாரி மாரடைப்பு காரணமாக மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இந்நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மூன்று பிள்ளைகளின் தந்தையான இந்த பொலிஸ் அதிகாரி ஓய்வு பெறத்தயாராகவிருந்த நிலையில் இவ்வாறு உயிரிழந்தார். (எ)

# சுமந்திரனின் எஸ்.ரி.எப். பாதுகாப்பு விலக்கப்படுவதற்கு நானே காரணம்

## சரத் வீரசேகர ஒப்புதல்



கொழும்பு,பெப்.10

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுக்கு வழங்கப்பட்டு வந்த விஷேட அதிரடிப்படை (எஸ்.ரி.எப்.) பாதுகாப்பு தனது உத்தரவின் பேரிலேயே நீக்கப்பட்டது என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி விஷேட அதிர டிப் படை பாதுகாப்பை பெற்றுக் கொண்ட சுமந்திரன், ஆர்ப்பாட் டத்தில் கலந்து கொண்டிருந்த நிலையிலேயே அவருக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டது என் றும் அவர் குறிப்பிட்டார்.

சிங்கள தொலைக்காட்சி ஒன் றில் இடம்பெற்ற விஷேட நேர் காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உண்மையாகவே சுமந்திரனின் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்திருந்தால் அவர் ஒரு பொது நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கமாட்டார்.

இருப்பினும் சுமந்திரனுக்கு அனைத்து பாராளுமன்ற உறுப் பினர்களுக்கும் வழங்கப்படும் பொலிஸ் பாதுகாப்பு தொடர்ந்தும் வழங்கப்படும்- என்றார். (எ)



### ஈஸ்டர் தாக்குதல்:

# விசாரணை அறிக்கை பிரதி வழங்க ஜனாதிபதியிடம் பேராயர் கோரிக்கை

கொழும்பு,பெப்.10

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ள ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான அறிக்கையின்பிரதியொன்றை தமக்கு வழங்குமாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரியுள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதிக்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என பேராயரின் ஊடகப் பேச்சாளர் பேராசிரியர் கமிலஸ் பெர்னாண்டோ கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் குறித்து அறியப்படுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும்.

அவர்கள் தொடர்பில் நாட்டின் சட்டத்துக்கு அமைய செயல்படுமாறு பேராயர் கோரியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடவில்லை

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு,பெப்.10

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் கலந்துரையாட விஷேட தினமொன்று விரைவில் அறிவிக்கப்படவுள்ளது- என் றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதி

கோட்டாபய ராஜபக்ஷவிடம் கடந்த முதலாம் திகதி கையளிக்கப்பட்டது. (எ)

# ஜோர்தானிலிருந்து 290 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பினர்

கொழும்பு,பெப்.10

தொழில்வாய்ப்புக்காக ஜோர்தானுக்கு சென்று அங்கு பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளான 290 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பினர்.

இதன்படி அவர்கள் ஜோர்தானின் அம்மானிலிருந்து ஶ்ரீலங்கா எயர்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல். -554 என்ற விமானத்தில் நேற்று அதிகாலை 4.15 மணியளவில் கட்டுநாயக்கா - பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இலங்கை அரசாங்கத்தின் திருப்பி அனுப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் இவர்கள் அழைத்து வரப்பட்டனர். விமான நிலையத்தை இவர்கள் வந்தடைந்ததும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன் இலங்கை இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். (எ)




# தமிழ்,சிங்கள மக்களின் அமைதி வாழ்வை விரும்பாதவர்களே ஜெனிவாவில் கோஷம்

## அமைச்சர் வீரவன்ச குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.10

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திக்கொடுத்த பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்ததை விரும்பாதவர்களும், இந்நாட்டில் தமிழ், சிங்கள மக்கள் அமைதியாக வாழ்வதை விரும்பாதவர்களும் இன்று ஜெனிவாவில் கோஷம் எழுப்பி இலங்கையைத் தண்டிக்க முயற்சித்துக்கொண்டுள்ளனர் என அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம்சாட்டியுள்ளார்.



முன்னைய ஆட்சியில் அப்போதைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இலங்கையைக் காட்டிக்கொடுத்து, அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணையை ஆதரித்ததன் விளைவாகவே எம்மால் எந்தவொரு சுயாதீன தீர்மானமும் எடுக்க முடியாது போனது.

எனினும் நாம் இன்று அனைத்தையும் நிராகரிப்பதாக வெளிப்படையாக தெரிவித்துள்ளோம். அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணையில் இருந்து நாம் வெளியேறிவிட்டோம். எனினும் எமது இராணுவம் மீதும், எமது ஆட்சி மீதும் பொய்க்குற் றச்சாட்டுக்களை முன்வைத்து வேறுவழியில் எமது அரசாங்கத்தை பலவீனப்படுத்த முயற்சி கள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

எனினும் எம்மீது சுமத்தப்பட்டுள்ள சகல குற்றச்சாட்டுக்களுக்கும் அரசாங்கம் உரிய பதில் வழங்கும். அதேபோன்று எமது இராணுவத்தை காப்பாற்றும் சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம்- என்றார். (எ)

# யுத்தக்குற்றங்கள் இடம்பெறவில்லை

## சரத் பொன்சேகா விளக்கம்



கொழும்பு,பெப்.10

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்டது ஜெனிவா உடன்படிக்கைக்கு அமையவே. எனவே யுத்தத்தின் போது போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என எந்தவொரு தவறுகளையும் நாம் செய்யவில்லை என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

இதேவேளை தற்போதைய அரசாங்கத் தரப்பினர் அவர்களுடைய கடந்த கால ஆட்சியில், ஜெனிவா விடயத்தில் சர்வதேசத்துக்கு சவால் விடுத்துக்கொண்டிருந்தனால் தான் இப்போது இந்த இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான நிலைப்பாடுகள் தொடர்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தனிப்பட்ட ஒருவர் அல்லது இருவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுமாயின் அது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (எ)

# ஜனாதிபதி கோட்டாபயவுக்கு பெரமுனவில் உயர் பதவி

## பிரதமர் மஹிந்தவை விலக்க விரும்பவில்லையாம் வீரவன்ச

கொழும்பு,பெப்.10

மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக நுகேகொடையில் இடம்பெற்ற பேரணிக்குத் தலைமை தாங்கியவர்களில் ஒருவராகச் செயல்பட்டமை தவறு என்றால் மன்னிப்புக் கோரத் தயாராக உள்ளேன் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட வேண்டும் என விமல் வீரவன்ச தெரிவித்த கருத்து தொடர்பில் மன்னிப்புக் கோர வேண்டும் என பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் நேற்று முன்தினம் கொழும்பில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நீர்கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த விமல் வீரவன்ச, 2015 ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னர், மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக நுகேகொடையில் இடம்பெற்ற பேரணிக்கு நான் தலைமை தாங்கினேன். இது தவறு என்றால் நான் மன்னிப்புக் கோரத் தயார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உயர் பதவியில் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் அவ்வாறு கூறினேன். மாறாக மஹிந்த ராஜபக்ஷவை தலைமைத்துவத்திலிருந்து விலக்க வேண்டும் என்பதற்காக பேசவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ தலைவராகச் செயல்படும் போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் கட்சியில் உயர் பதவி ஒன்றை வழங்கினால்தற்போதைய அரசியல் பலம் மேலும் வலுவடையக்கூடும் என்று விளக்கமளித்துள்ளார். (எ)

# 1000 ரூபா நிர்ணயிக்கப்பட்டால் ஏனைய கொடுப்பனவு இல்லை

## பெருந்தோட்ட நிறுவனங்கள் மிரட்டல்

ஹற்றன்,பெப்.10

தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டால் அதனை வழங்க நாம் கட்டுப்படுவோம். ஆனால்ஏனைய கொடுப்பனவுகளில் தளர்வுகள் ஏற்படும். ஆயிரம் ரூபாவையும் கொடுத்து ஏனைய கொடுப்பனவுகளையும் வழங்க முடியாது. அதேபோன்று எம்மால் இரண்டு சட்டங்களின் கீழ் கட்டுப்படவும் முடியாது என பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அரசாங்கம் எமக்கு அழுத்தங்கள் கொடுக்க முன்னர் அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழுள்ள தோட்டங்களில்பணிபுரியும்ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபாவை கொடுத்தாக வேண்டும். அரசாங்கம் அதனை செய்யாது மாறாக எம்மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பது நியாயமானதா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக்க வேண்டும் என்ற நீண்டநாள்கள் கோரிக்கைக்கமைய தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் தலைமையில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள தொழிற் சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனம் ஆகியன நேற்று முன்தினம் கொழும்பில் தொழில் அமைச்சில் பேச்சுக்களை முன்னெடுத்திருந்த நிலையில், தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பில் பெருந்தோட்ட நிறுவனங்கள் சம்மேளனத்தின் தீர்மானம் தொடர்பில் வினவிய போதே பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் ரொஷான் இராஜதுரை இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# இரு வாரங்களில் 1,000 ரூபா சம்பளம் குறித்த வர்த்தமானி

## அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு,பெப்.10

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,000 ரூபாயாக அதிகரிக்கும் திட்டம் இரண்டு வாரங்களுக்குள் வர்த்தமானி அறிவிப்பு மூலம் வெளியிடப்படும் என பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: 1000 ரூபா சம்பளம் தொடர்பில் ஆட்சேபனைகளை முன்வைக்க இரண்டு வார கால அவகாசம் வழங்கப்படும். அதன் பின்னர் இந்தத் திட்டம் சட்டமாக மாறும்.

இருப்பினும் இறுதி முடிவு எடுக்கப்படும் முன்னர் பெருந்தோட்ட உரிமையாளர்கள் மற்றும் நிறுவனங்களின் கவலைகள் தொடர்பிலும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளும்.

அத்தோடு வர்த்தமானி அறிவித்தல் வெளியானதும் தொழிலாளர்களுக்கான அதிகரித்த ஊதியத்தை தோட்ட உரிமையாளர்கள் வழங்க வேண்டியிருக்கும்- என்றார். (எ)

# தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை

## அமைச்சர் ரமேஸ் பத்திரண



கொழும்பு,பெப்.10

பெருந்தோட்டத் தொழிலாளர்களது உரிமைகளை பாதிக்கும் வகையில் பெருந்தோட்ட நிறுவனங்கள் செயல்பட்டால் அதனைத் தடுக்கும் வகையிலான பொறிமுறைகளை வகுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஸ் பத்திரண தெரிவித்தார்.

சம்பளநிர்ணய சபையில்பெருந்தோட்டத் தொழிலாளர் களுக்கு 1000 ரூபா நாளாந்த சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று நேற்று முன்தினம் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் அதனை ஏற்க முடியாது என்றும் 1000 ரூபா சம்பளம் சட்டமாக்கப்பட்டால் 13 நாள்களே தொழில் வழங்கப்படும் என்பதோடு, கூட்டு ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும் என்றும் பெருந்தோட்ட நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

இதுதொடர்பில் நேற்று பாராளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் வழங்கிய அமைச்சர் ரமேஸ் பத்திரண, பெருந்தோட்டத்துறை நிறுவனங்களுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்றுக்கு வரமுடியாத சூழ்நிலையிலேயே சம்பள நிர்ணய சபையின் ஊடாக இந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டது. இதனை நிறுவனங்கள் முறையாக அமுலாக்க வேண்டும்.

பெருந்தோட்டத்துறைகளில் பயன்படுத்தப்படாதிருக்கின்ற காணிகள் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. இவ்வாறான காணிகளை அடையாளம் கண்டு சரியான முகாமைத்துவ நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.

# குற்றவியல் விசாரணைகள் விரைவில் நிறைவு

கொழும்பு,பெப்.10

பெருங்குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல், பாவனை குற்றங்கள் தொடர்பில் குற்றவியல் விசாரணைகளை மூன்று மாதங்களில் நிறைவு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன இதனைத் தெரிவித்தார். (எ)



# ஜனநாயக ஆட்சி மீளவும் மியன்மாரில் வேண்டும்!



## பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்து

நைப்பிற்றோ, பெப். 10

**மியன்மாரில் அரசியல் தலைவர்களை விடுவிக்கவும், நாட்டின் ஜனநாயக ஆட்சியை மீண்டும் தொடங்கவும் பாப்பரசர் பிரான்சிஸ் அந்நாட்டு இராணுவத் தலைவர்களிடம் வலியுறுத்தினார்.**

தனது வருடாந்த உரையை நேற்று ன்னம் ஆற்றியபோதே பாப்பரசர் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

ஒரு வாரத்துக்கு முன்னர், மியன்மாரில் தலைவர் ஆங் சாங் சூகியைச் சிறைப்பிடித்து, இராணுவம் நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தது. இந்நிலையில், மீண்டும் ஜனநாயக ஆட்சியை வலியுறுத்தி மியன்மாரில் பல்லாயிரக்கணக்கானோர் பல நகரங்களில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், 180இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகளிடம் ஆற்றிய உரையில், மியன்மாரில் சமீபத்திய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயகத்திற்கான வழி, கடந்த வார ஆட்சிக் கவிழ்ப்பால் மிகவும் குறுக்கிடப்பட்டுள்ளதாக பாப்பரசர் பிரான்சிஸ் கூறியுள்ளார்.

இது வெவ்வேறு அரசியல் தலைவர்களைச் சிறையில் அடைக்க வழிவகுத்தது எனவும், நாட்டின் நன்மையை நோக்கமாகக் கொண்ட ஒரு நேர்மையான கலந்துரையாடலை மேற்கொள்ள இவர்கள் உடனடியாக விடுவிக்கப்படுவார்கள் என நம்புவதாகவும் அவர் கூறினார்.

(அ)

## பிரான்ஸின் முதல் அரசுப் பிரமுகர் பகிரங்கமாகத் தடுப்பூசி ஏற்றினார்



பாரிஸ், பெப். 10

பிரான்ஸில் சுகாதார அமைச்சர் ஒலிவியே வேரன்( Olivier Véran) நேற்று முன் தினம் பகிரங்கமாகத் தொலைக்காட்சிக் கமராக்களின் முன்னால் வைரஸ் தடுப்பூசி ஏற்றிக் கொண்டார். சுகாதார அமைச்சர் நாட்டில் பாவனைக்கு வந்துள்ள 'அஸ்ராஸெனகா' (AstraZeneca) தடுப்பு மருந்தின் முதலா வது ஊசியை ஏற்றிக் கொள்கின்ற காட்சியை ஊடகங்கள் வெளியிட்டிருக்கின்றன.

மெலுன் மருத்துவமனையில் அவர் நேற்று முன் தினம் காலை தனக்குரிய தடுப்பூசியை ஏற்றிக்கொண்டார். பிரான்ஸில் கொரோனா வைரஸ் தடுப்பூசியை பகிரங்கமாகப் பெற்றுக் கொள்கின்ற முதலாவது அரசாங்கப் பிரமுகர் என்ற இடத்தை அவரே பெறுகிறார்.

சுகாதாரப் பணியாளர்கள் சகலருக்கும் தடுப்பூசி ஏற்றுகின்ற திட்டத்தின் கீழ் நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணரான ஒலிவியே வேரனும் தடுப்பூசி ஏற்றிக் கொண்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தாதியர்கள், மருத்துவர்கள், நோயாளர் பராமரிப்போர் உட்பட சகல மருத்துவப் பணியாளர்களுக்கும் அடுத்த 15 நாட்களுக்குள் தடுப்பூசி ஏற்றும் பணி நிறைவு செய்யப்படும் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

பிரான்ஸின் சுகாதார அதிகார சபையால் கடந்த வாரம் பாவனைக்கு அனுமதிக் கப்பட்ட "அஸ்ராஸெனகா" தடுப்பூசியின் 270,000 புட்டிகள் ஏற்கனவே நாட்டுக்கு வந்து சேர்ந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் ஆட்சியில் அமர்வதற்கு ஒற்றுமையுடன் செயல்படுவோம்

## சசிகலா அறிவுரை



சென்னை, பெப். 10

தீவிர அரசியலில் ஈடுபட உள்ளேன். விரைவில் மக்களை சந்திப்பேன். மீண்டும் ஆட்சியில் அமர அனைவரும் ஒற்றுமையுடன் செயல்படுவோம் என வாணியம்பாடியில் சசிகலா தெரிவித்தார்.

வாணியம்பாடி நெக்குந்தி சுங்கச்சாவடிக்கு சசிகலா வந்தபோது, அ.ம.மு.க திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் பாலசுப்பிரமணி, ஜோலார்பேட்டை நகரச் செயலாளர் தென்னரசு, மாவட்ட பொருளாளர் கண்ணபிரான் ஆகியோர் வரவேற்பு அளித்தனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் சசிகலா கூறும்போது-

தீவிர அரசியலில் ஈடுபட உள்ளேன். அ.தி.மு.க அலுவலகத்துக்கு செல்வீர்களா என நிறைய பேர் கேட்கின்றனர். பொறுத்திருந்து பாருங்கள், என்ன நடக்கப் போகிறது என்று. தொண்டர்களின் உற்சாக வரவேற்பை கண்டு நெகிழ்ச்சி அடைகிறேன். தொண்டர்களின் அன்புக்கும், மக்களின் அன்புக்கும் நான் எப்போதுமே அடிமை. புரட்சித்தலைவர் கூறியதைபோல, "அன்புக்கு நான் அடிமை, தமிழ் பண்புக்கும் நான் அடிமை, கொண்ட கொள்கைக்கும் நான் அடிமை, தமிழ் மக்களுக்கும், தொண்டர்களுக்கும் என்றுமே நான் அடிமை".

அடக்கு முறைக்கு என்றுமே நான் அடிபணிய மாட்டேன். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நினைவிடம் அவசர அவசரமாக திறக்கப்பட்டது. அதன்பிறகு அதே அவசர கதியில் மூடப் பட்டது ஏன் என் பது தமிழக மக்களுக்கு தெரியும். எனது வாகனத்தில் அதிமுக கொடி பயன்படுத்துவது தொடர் பாக அமைச்சர்கள் பொலிஸாரிடம் புகார் அளித்திருப்பது அவர்களது பயத்தை காட்டுகிறது.

அ.தி.மு.கவை கைப்பற்றுவீர்களா என சிலர் கேட்கின்றனர். மிக விரைவில் உங்களையும் (செய்தியாளர்கள்) மக்களையும் நேரில் சந்திப்பேன். அப்போது சொல்கிறேன். அதுவரை பொறுத்திருங்கள். அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து செயல்படவேண்டும். எத்தனையோ முறை சோதனைகளை அ.தி.மு..க சந்தித்திருக்கிறது. அப்போதெல்லாம் 'பீனிக்ஸ்' பறவைபோல மீண்டு எழுந்து வந்துள்ளது கட்சி. புரட்சித்தலைவி ஜெயலலிதா வழி வந்த பிள்ளைகளாகிய நாம் ஒற்றுமையுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்- என்றார்.



# அதிகாலை சென்னை வந்தடைந்த சசிகலா!

சென்னை, பெப். 10

சொத்துக் குவிப்பு வழக்கில் பெங்களூர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட வி.கே. சசிகலா நேற்று முன் தினம் திங்கட்கிழமை புறப்பட்டு நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை சென்னையை வந்தடைந்தார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்டு பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் தோழி வி.கே. சசிகலாவுக்கு விதிக்கப்பட்டிருந்த 4 ஆண்டுகாலச் சிறைத் தண்டனைக் காலம் கடந்த ஜனவரி 27ஆம் திகதி முடிவுக்குவந்தது.

ஆனால், தன் தண்டனைக் காலத்தின் கடைசி சில நாட்களில் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்ததால், பெங்களூரில் இருந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்றார். கொரோனாவிலிருந்து குணமடைந்த பிறகு சில நாட்கள் கர்நாடக மாநிலத்திலேயே தங்கியிருந்தார் சசிகலா.

இதற்குப் பிறகு, கடந்த திங்கட்கிழமை காலையில் பெங்களூருக்கு அருகில் உள்ள தேவனஹள்ளியிலிருந்து புறப்பட்டார் சசிகலா. அவருக்குப் பின்னால் வந்த வாகனத்தில் டி.டி.வி. தினகரன் பயணம் செய்தார். பெங்களூர் - சென்னை இடையிலான வழிநெடுக சசிகலாவின் ஆதரவாளர்களும் அ.ம.மு.க. தொண்டர்களும் அவருக்கு வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சசிகலாவின் பயணத் திட்டத்திற்கு கிருஷ்ணகிரி மாவட்ட பொலிஸ் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்திருந்ததால், பெங்களூர் - தமிழக எல்லைவரை, தன் காரிலேயே அ.தி.மு.க. கொடியுடன் வந்தவர் தமிழக எல்லைக்குள் வந்தவுடன், அ.தி.மு.க. கொடி கட்டப்பட்டிருந்த அந்தக் கட்சியின் நிர்வாகி ஒருவரின் காரில் ஏறி, அந்த வாகனத்திலேயே சென்னை நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தார்.

பெங்களூர் முதல் சென்னை வரை சசிகலாவுக்கு 56 இடங்களில் வரவேற்பளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனால், தேவனஹள்ளியிலிருந்து சென்னை இடையிலான சுமார் 380 கி.மீ. தூரத்தை அவர் கடக்க 20 மணி நேரத்திற்கும் மேலானது.

வாணியம்பாடி அருகில் வாகனத்தை நிறுத்தி பேசிய சசிகலா, அடக்குமுறைக்குத் தான் அடிபணியப் போவதில்லை என்றும் நிச்சயமாக தொடர்ந்து அரசியலில் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்தார்.

ஓரிடத்தில் கிரேன் மூலம் அவரது வாகனத்திற்கு மிகப் பெரிய மாலை அணிவிக்கப்பட்டது. சாலையின் பல்வேறு இடங்களில் காத்திருந்த தொண்டர்கள் சசிகலாவின் வாகனம் மீது பூக்களை வீசினர். ட்ரோன் மூலம் சசிகலா படம் பொறிக்கப்பட்ட பதாகை ஓரிடத்தில் பறக்கவிடப்பட்டது.

அதிகாலை மூன்றே முக்கால் மணியளவில் சென்னை நகருக்குள் நுழைந்த சசிகலாவின் வாகன ஊர்வலம், 4.15 மணியளவில் ராமாபுரத்தில் உள்ள எம்.ஜி.ஆரின் இல்லத்தை வந்தடைந்தது. அங்கு எம்.ஜி.ஆரின் இல்லத்திற்குள் சென்று சிறிது நேரம் அமர்ந்திருந்த சசிகலா, பிறகு அங்கிருந்த எம்.ஜி.ஆரின் சிலைக்கு மாலையிட்டார். பிறகு, அங்கிருந்து புறப்பட்டு தி.நகரில் உள்ள தனது உறவினர் வீட்டுக்கு காலை ஆறே முக்கால் மணியளவில் சென்றடைந்தார் சசிகலா.

இவரது பயண ஊர்வலத்தின் காரணமாக, வழியெங்கும் பல இடங்களில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. எம்.ஜி.ஆர். இல்லத்திலிருந்து சசிகலா புறப்பட்ட பிறகு அரை மணி நேரத்திற்கும் மேலாக போரூர் முதல் கிண்டி மேம்பாலம் வரையிலான சாலையில் கடுமையான போக்குவரத்து நெரிசல் நீடித்தது.

# சசிகலாவுக்கு உதவியதாக 7 பேர் மீது எடப்பாடி அதிரடி

சென்னை, பெப். 10

சசிகலாவுக்கு கார் வழங்கிய அதிமுக நிர்வாகி உட்பட 7 பேர் கட்சியில் இருந்து நீக்கப்படுவதாக அதிரடியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரில் இருந்து நேற்று தமிழகம் திரும்பிய சசிகலாவுக்கு அ.தி.மு.க நிர்வாகி ஒருவர் கார் கொடுத்து உதவினார். அந்த காரில் அ.தி.மு.க கொடி மற்றும் ஜெயலலிதா புகைப்படம் இருந்தது. இதற்கு என்ன காரணம் என்றபோது சசிகலா வந்த கார் பழுதானதால், அவர் காரை வாங்கிப் பயன்படுத்தியதாக தினகரன் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இது சசிகலாவின் ராஜதந்திரம் என்று ஒரு புறம் கூறப்பட்டு வருகிறது.

ப்இந்நிலையில், சசிகலாவுக்கு கார் வழங்கிய அ.தி.மு.க நிர்வாகி சம்பங்கி உள்பட வரவேற்பு அளித்த 7 பேர் கட்சியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கழக கட்டுப்பாட்டை மீறியதால், கட்சியில் இருந்து நீக்கப்படுவதாக துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதற்கு சம்பங்கி இதை நான் சட்டப்படி எதிர் கொள்வேன் என்று தெரிவித்துள்ளார்.

# மேற்கிந்திய தீவுகள் அணி திரில் வெற்றி!



பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 3 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 1-0 என்ற கணக்கில் மேற்கிந்திய தீவுகள் அணி முன்னிலையில் உள்ளது.

சட்டோகிராம் மைதானத்தில் கடந்த புதன்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 430 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மெயிடி ஹசன் 103 ஓட்டங்களையும் சகிப் ஹல் ஹசன் 68 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், வோரிக்கன் 4 விக்கெட்டுகளையும் கோர்ன்வோல் 2 விக்கெட்டுகளையும் ரோச், கெப்ரியல் மற்றும் போனர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 259 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கிரைஜ் பிரெத்வெயிட் 76 ஓட்டங்களையும் பிளக்வுட் 68 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், மெயிடி ஹசன் 4 விக்கெட்டுகளையும் முஷ்டபிசுர் ரஷ்மான், தைஜூல் இஸ்லாம் மற்றும் நயீம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

தொடர்ந்து 171 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய பங்களாதேஷ் அணி, 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 223 ஓட்டங்களை பெற்றிருந்தபோது தனது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. இதனால் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு 395 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மொமினுல் ஹக் 115 ஓட்டங்களையும் லிடொன் தாஸ் 69 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், கோர்ன் வோல் மற்றும் வோரிக்கன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் கெப்ரியல் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 395 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, போட்டியின் இறுதிநாளில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் மேற்கிந்திய தீவுகள் அணி 3 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, கெய்ல் மேயர்ஸ் ஆட்டமிழக்காது 210 ஓட்டங்களையும் போனர் 86 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், மெயிடி ஹசன் 4 விக்கெட்டுகளையும் தைஜூல் இஸ்லாம் 2 விக்கெட்டுகளையும் நயீம் ஹசன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, முதல் இன்னிங்ஸில் 40 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காது 210 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்ட கெய்ல் மேயர்ஸ் தெரிவு செய்யப்பட்டனர்.

குறிப்பாக இப்போட்டியில் தனது முதல் போட்டியிலேயே இரட்டை சதத்தைப் பதிவு செய்த கெய்ல் மேயர்ஸ் பல சாதனைகளை பதிவு செய்யதார்.

அவர் இரட்டைச் சதத்தை பதிவுசெய்ததன் மூலம் ஆசியாவில் நான்காவது இன்னிங்ஸில் அறிமுக போட்டியிலேயே இரட்டை சதம் அடித்த வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

அத்துடன் ஆசியாவில் நான்காவது இன்னிங்ஸில் மிகப்பெரிய வெற்றி இலக்கை பதிவுசெய்த சந்தர்ப்பமாக இது பதிவானது. இதுதவிர ஒட்டுமொத்தமாக நான்காவது இன்னிங்ஸில் ஐந்தாவது மிகப்பெரிய வெற்றி இலக்கை அடைந்த சம்பவமாகவும் பதிவானது.

இதுதவிர நான்காவது இன்னிங்ஸில் இரட்டைச் சதம் அடித்த ஆறாவது வீரர் என்ற பெருமயை மேயர்ஸ் பெற்றுக்கொண்டார்.

மேலும் அறிமுகப் போட்டியிலேயே தனிப்பட்ட வீரரொருவர் பதிவு செய்த ஐந்தாவது அதிகப்பட்ச வெற்றி இலக்காக இது பதிவாகியுள்ளது.

பங்களாதேஷ் மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 11ஆம் திகதி டாக்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது.



## இரண்டாவது டெஸ்டிலிருந்து ஷகிப் அல் ஹசன் விலகல்!

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியிலிருந்து பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் ஷகிப் அல் ஹசன் விலகியுள்ளார்.

சட்டோகிராமில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளில், தனது இடது தொடையில் காயத்துக்குள்ளான ஷகிப் அல் ஹசன், தற்போது காயத்திலிருந்து மீளவில்லை என்பதால் இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்டை ஷகிப் அல் ஹசன் தவறவிடுவார் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது


இது தொடர்பாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில்-

ஷகிப் இந்த வாரம் அணியின் உயிர் பாதுகாப்பு குமிழியை விட்டு வெளியேறுவார். அவர் தொடர்ந்து உடல் ரீதியான வலிமையை மீட்டு பலப்படுத்துவதால் டாக்காவில் உள்ள பி.சி.பி மருத்துவத்தின் கண்காணிப்பு மற்றும் சிகிச்சையின் கீழ் இருப்பார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

.இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி, நாளை மறுதினம் மிர்பூரில் உள்ள ஷெர்-இ-பங்களா தேசிய கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுகிறது.

முதல் டெஸ்டில் மூன்று விக்கெட்டுகள் வித்தியா சத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றிபெற்று, தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலைப் பெற்றுள்ளது.

## ரிஷப் பந்த் நிதியுதவி



உத்தராகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் மீட்புப் பணிக்காக தனது போட்டி ஊதியத்தை முழுமையாக அளிப்பதாக இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் ரிஷப் பந்த் தெரிவித்துள்ளார்.

உத்தராகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ரிஷப் பந்த் , ஹரித்துவார் மாவட்டம் ரூர்கீ நகரைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இமயமலைப்பகுதியில் உள்ள ஜோஷிமடத்தில் நேற்று முன் தினம் மிகப்பெரிய அளவில் பனிப்பாறை உடைப்பு ஏற்பட்டு பனிச்சரிவு நிகழ்ந்தது. இதனால், சமோலி மாவட்டத்தில் உள்ள அலாக்நந்தா, ரிஷிகங்கா ஆற்றில் திடீரென கட்டுக்கடங்கா வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

இதில் ரிஷிகங்கா ஆற்றின் குறுக்கே 13.2 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் வகையில் கட்டப்பட்டு வந்த ரிஷிகங்கா மின்திட்டம்(தபோவன் அணை) முழுமையாக ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டது. இந்த மின்திட்டத்தில் பணியாற்றி வந்த 100 க்கும் மேற்பட்ட வர்களைக் காணவில்லை. இதுவரை 16 பேர் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன, 100க்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லை.

இந்நிலையில் இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் ரிஷப்பந்த் உத்தராகாண்ட் மீட்புப் பணிக்காக போட்டியின் ஊதியத்தை முழுமையாக வழங்குவதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரிஷப் பந்த் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்ட கருத்தில் “ உத்தராகாண்டில் பனிச்சரிவில் சிக்கி பலர் உயிரிழந்த செய்தி கேட்டு வேதனை அடைகிறேன். மாநிலத்தின் மீட்புப்பணிக்காக என்னுடைய போட்டி ஊதியம் அனைத்தையும் வழங்க விரும்புகிறேன். இன்னும் அதிகமான மக்கள் உதவ முன்வர வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.




## இப்ராகிமோவிச் ‘500’

கழக உதைபந்தாட்டத்தில் தனது 500 கோல் அடித்து அசத்தினர் இப்ராகிமோவிச்.

சுவீடன் உதைபந்தாட்ட நட்சத்திரம் இப்ராகிமோவிச் 39. தற்போது இத்தாலியில் நடக்கும் ‘சீரி ஏ’ தொடரில் ஏ.சி.மிலன் அணிக்காக விளையாடுகிறார். க்ல் குரோடன் அணியை வீழ்த்தியது. இதில் இப்ராகிமோவிச் இரண்டு கோல் அடித்தார்.

இதையடுத்து கழக உதைபந்தாட்ட அரங்கில் 500 கோல் அடித்த 11ஆவது வீரர் ஆனார். 825 ஆவது போட்டியில் இந்த மைல்கல்லை எட்டினார். பார்சிலோனா, இன்டர் மிலன், யுவண்டஸ் உள்ளிட்ட அணிகளுக்காக மொத்தம் 395 கோல் அடித்த இப்ராகி மோவிச், ஐரோப்பிய போட்டிகளில் 57, டொமஸ்ரிக் கிண்ணப் போட்டிகளில் 48 கோல்கள் அடித்துள்ளார்.

தவிர சுவீடன் அணிக்காக 62 கோல் அடித்தார்.

தற்போது விளையாடிக் கொண்டிருக்கும் வீரர்களில் 500 மற்றும் அதற்கும் கோல் அடித்த வீரர்களில் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி (650), போர்த்துக்கலின் ரொனால்டோவுக்கு (661) அடுத்த இடம் பெற்றார் இப்ராகிமோவிச்.

## சிறந்த வீரர் ரிஷப் பந்த்




ஐ.சி.சி., சார்பில் ஜனவரி மாத சிறந்த வீரராக இந்தியாவின் ரிஷப் பந்த் தேர்வு செய்யப்பட்டார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் சார்பில் 2021 முதல், ஒவ்வொரு மாதமும் சிறப்பாக செயல்பட்ட வர்களுக்கு விருது தரப்படுகின்றன. கடந்த ஜனவரியில் சிறப்பாக செயல்பட்ட வீரர்களில் இந்தியாவின் ரிஷாப் பந்த், இங்கிலாந்தின் ஜோ ரூட், அயர்லாந்தின் பால் ஸ்டெர்லிங் என மூன்று வீரர்கள் ‘ரொப் 3’ பட்டியலில் இடம் பெற்றனர்.

இதில் ரிஷாப் பன்ட், அவுஸ்திரேலிய தொடரில் சிட்னி டெஸ்டில் 97 ரன் எடுத்து போட்டியை ‘சமநிலை’ செய்ய உதவினார். அடுத்து நடந்த பிரிஸ்பேன் டெஸ்டில் 89 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் 32 ஆண்டுக்குப் பின் பிரிஸ்பேன் மைதானத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்திய இந்திய அணி, ‘போர்டர் - கவாஸ்கர்’ கிண்ணத்தை மீண்டும் வென்றது. இதையடுத்து ஜனவரி மாத சிறந்த வீரராக ரிஷாப் பந்த் தேர்வு செய்யப்பட்டார்.

ஈழநாடு



# கொரோனா வைரஸ் நீர்வழியாக பரவாது

## சபையில் கூறினார் சுதர்ஷினி

கொழும்பு,பெப்.10

**கொரோனா வைரஸ் நீர்வழியாக பரவாது என கொரோனா ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார எழுப்பிய கேள்விக்கு பாராளுமன்றில் நேற்றுப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அநுராதபுரம் ஹெப்பிட்டிகொல்லாவ பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நோயாளிகள் பயன்படுத்திய கழிவுநீர் பாடசாலைக்கு அருகிலுள்ள ஒரு பகுதியில் பாய்வதாக ரோஹண பண்டார தெரிவித்தார்.

தண்ணீர் மாசுபடும் என்பதனால் கொரோனாவினால் பாதிக்கப்பட்ட வர்களின் உடல்களை



அடக்கம் செய்யும் நடவடிக்கை இலங்கையில் நிராகரிக்கப்பட்டது என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

எனவே ஹெப்பிட்டிகொல்லாவ பகுதியில் பாயும் கழிவு நீரால் மாணவர்கள் பாதிக்கப்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது என அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி: கொரோனா வைரஸ் காற்று வழியாக மட்டுமே பரவுகின்றது. நீர் வழியாக பரவவில்லை.

இருப்பினும் இயற்கை நீருடன் இத்தகைய அசுத்தமான நீர் கலப்பது வேறு நோய்கள் தோன்றுவதற்கு வழிவகுக்கும் என்பதனால் இதுதொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

அத்தோடு இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (எ)



# பொலிஸாருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மட்டக்களப்பில் ஆரம்பம்

மட்டக்களப்பு,பெப்.10

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் பொலிஸாருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் ஆரம்ப நடவடிக்கை நேற்று மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்தியர் கிரிசுதன் தலைமையில் இடம்பெற்றது.

பாதுகாப்புப் படையினருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் மாவட்டத்திலுள்ள 14 பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் பொலிஸாருக்கு இந்தத் தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நேற்று மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் முதற்கட்டமாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையம், ஆயித்தியமலை பொலிஸ் நிலையம், ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த 60 பொலிஸாருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டதுடன் ஏனைய பொலிஸாருக்கும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறும் என வைத்தியர் கிரிசுதன் தெரிவித்தார். (எ)



# தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மே மாதத்துக்குள் நிறைவடையும்

## அமைச்சர் பிரசன்ன தகவல்

கொழும்பு,பெப்10

இலங்கையில் எதிர்வரும் மே மாதத்துக்குள் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் நிறைவு செய்யும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சில் நேற்று இடம்பெற்ற விஷேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். கொரோனா வைரஸ் தொற்று ஆபத்து இன்றி சுற்றுலாப் பயணிகள் பார்வையிடக்கூடிய பாதுகாப்பான நாடாக இலங்கை மாறும்.

இதேவேளை இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி போன்ற நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் சுற்றுலா மேம்பாட்டு ஆணைக்குழுவால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன- என்றார். (எ)

# ஒரு வார வீதி விபத்துக்களில் 45 பேர் பலி! 266 பேர் காயம்

மட்டக்களப்பு, பெப்.10

இலங்கையில் கடந்த ஒரு வாரத்தில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி 45 பேர் உயிரிழந்ததுடன் 266 பேர் காயமடைந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நாளொன்றுக்கு சராசரியாக வீதி விபத்துக்களில் 06 பேர் உயிரிழந்தனர் என இந்தத் தகவல் வெளிப்படுத்திக் காட்டுகிறது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

காயமடைந்த 266 பேரில் 94 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். கம்பஹா, கண்டி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

அதேநேரம் ஜனவரி 31 முதல் பெப்ரவரி 06 ஆம் திகதி வரை நாட்டில் மொத்தம் 403 விபத்துக்கள் பதிவாகியுள்ளன- என்றார். (எ)


# மரண அறிவித்தல்

## பொன்னையா பாலசிங்கம்



மலர்வு :- 1933 . 03 . 10
உதிர்வு :- 2021 . 02 . 08

4 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாலசிங்கம் நேற்றுமுன்தினம் (08.02.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணமுத்து - வியாழம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வீரலட்சுமியின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரன் (இலண்டன்), யோகேஸ்வரி, ஜெகதீஸ்வரி (இலண்டன்), கேதீஸ்வரி (ஆசிரியர்-மு/விக்கினேஸ்வரா வித்தியாலயம்), கேதீஸ்வரன் (பொது முகாமையாளர் - பலநோக்கு கூ.சங்கம், புதுக்குடியிருப்பு), பாலேஸ்வரி (கனடா), ஞானவேல் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் றஞ்சிதா (இலண்டன்), காலஞ்சென்ற மகேந்திரராசா, Dr.தவராசா (இலண்டன்), அன்புமணி (ஆசிரிய ஆலோசகர் - முல்லை கல்வி வலயம்), காலஞ்சென்ற சந்திரா, ஜெயலலிதா, கலாநிதி இரகுநாதன் (கனடா), மேகலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.02.2021) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**4 ஆம் வட்டாரம்,**
**புதுக்குடியிருப்பு.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0772165586**


# சட்டவிரோத வெளிநாட்டுப் பயணத்தை தவிர்த்தலுக்கான விழிப்பூட்டல் செயலமர்வு

## மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்றது





மட்டக்களப்பு, பெப்.10

சட்டவிரோதமான முறையில் முறையற்ற வெளிநாட்டுப் பயணத்தினை தவிர்ப்பதற்கான விழிப்பூட்டல்களை பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வொன்று காணிப் பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

மாவட்ட செயலக விளையாட்டு அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வுக்கு புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு அனுசரணை வழங்கியுள்ளது. விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் பயிற்றுவிப்பாளர்களுக்கான செயலமர்வினூடாக பிரதேசத்திலுள்ள புலம்பெயரும் இளைஞர் யுவதிகளுக்கு விழிப்பூட்டலை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

புலம்பெயர்தல் பாதுகாப்பாக இருப்பதற்கே என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இச்செயலமர்வில் சட்டவிரோதமான மற்றும் முறையற்ற வெளிநாட்டுப் பயனத்தினால் ஏற்படும் ஆபத்துகள் மற்றும் விபரீதங்கள் தெழிவுபடுத்தப்பட்டு முறையான வெளிநாட்டுப் பயணங்களுக்கான வழிமுறைகள் எடுத்துக்காட்டப்பட்டன.

இச்செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுப் உத்தியோகத்தர் வீ. ஈஸ்வரன், புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் இணைப்பாளர் திருமதி. ஆர. மயூரன் மேரி, மட்டக்களப்பு பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ. ராஜ்குமார், விளையாட்டு உத்தியோகத்தர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# "ஒரு நாடு - ஒரு சட்டம்" என்றால் முஸ்லிம்களுக்கு தனி சட்டம் ஏன்?

## ரத்ன தேரர் கேள்வி

**"ஒரு நாடு - ஒரு சட்டம்" என்ற கொள்கையில் பயணிக்கும் இலங்கையில் முஸ்லிம்களுக்கான காதி நீதிமன்றங்கள் தொடர்பில் அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித் தவை வருமாறு:

"ஒரு நாடு ஒரு சட்டம் என்பதுதான், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான கொள்கையாகக் காணப்படுகின்றது.

அரசமைப்பிலும் ஒரு நாட்டில் ஒரு சட்டம் என்றுதான் கூறப்படுகின்றது. இந் நிலையில் இலங்கையில் முஸ்லிம்களுக்கு என்று ஒரு திருமணச் சட்டம் காணப்படுகிறது.

இந்தச் சட்டமானது நபிகள் நாயகத்தால், கிறிஸ்துவுக்கு முன்பு வகுக்கப்பட்டதாக அல்-குர் ஆனில் கூறப்பட்டுள்ளது.

பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளிலேயே இந்தச் சட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில் இலங்கையில் இது நடைமுறையில் உள்ளது.

முஸ்லிம் மக்களுக்கு என இந்நாட்டில் காதி நீதிமன்றங்களும் காணப்படுகின்றன.

இந்த நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளின் சம்பளம் உள்ளிட்ட அனைத்தும் நீதி அமைச்சின் ஊடாகத்தான் வழங்கப்படுகின்றன.

முஸ்லிம்கள் வேறு மதத்தைச் சேர்ந்த ஒரு வரை திருமணம் செய்தால், அவரை கட்டாய மாக முஸ்லிமாக மாற்ற வேண்டும் எனக் கூறப் பட்டுள்ளது. விவாகரத்து செய்வதாக இருந்தாலும், சாதாரண நீதிமன்றங்களில் மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இது அசாதாரண விடயமாகும். நாட்டு மக்கள் ஒரு நாட்டில் இரண்டு சட்டங்கள் இருக்க வேண்டும் என்று இந்த அரசாங்கத் துக்கு வாக்களிக்கவில்லை. இதனை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும்"- என்றார். (எ)

## கருணாவுக்கு எதிரான மனு வாபஸ்!

கொழும்பு, பெப்.10

ஆனையிறவில் ஒரே இரவில் 2000 முதல் 3000 இராணுவத்தினரைக் கொலை செய்தோம் என்று கருணா அம்மான் தெரிவித்த கருத்து தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

கடுவல நகர சபை உறுப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு மீதான விசாரணை நேற்று மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் மூன்று பேர் அடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் பேரில் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயக மூர்த்தி முரளிதரனின் கருத்து தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மனுதாரரை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி மன்றுரைத்தார்.

ஏற்கனவே இதுதொடர்பில் விசாரணை இடம்பெற்று வருவதால் மனுவை தொடரத் தேவையில்லை என்பதால் அடிப்படை உரிமை மீறல் மனுவை திரும்ப பெற்றுக் கொள்ள அனுமதிக்குமாறும் நீதியரசர்களிடம் விண்ணப்பம் செய்தனர்.

இந்நிலையில் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் குழாம், மனு திரும்பப் பெறப்பட்டுள்ளது எனத் தெரிவித்து வழக்கை தள்ளுபடி செய்தது.

திகாமடுல்ல பகுதியில் இடம்பெற்ற பிரசார கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த கருணா அம்மான், யுத்த காலத்தில் ஆனையிறவு களமுனையில் இரண்டாயிரம் முதல் மூவாயிரம் படையினரை தான் கொன்றதாக தெரிவித்திருந்தார். இந்தக் கருத்து அக்காலப் பகுதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. (எ)



## மேல் மாகாண பாடசாலைகள் 15 ஆம் திகதி திறக்கப்படும்

கொழும்பு, பெப்.10

மேல் மாகாணத்தில் கம் பஹா, களுத்துறை மாவட்டங் களில் பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் 15 ஆம் திகதி திறக்கப்படவுள்ளன. இதேவேளை கொழும்பு மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பாடசாலை களும் அன்றைய தினம் திறக்கப் படும் என கல்வி அமைச்சர் பேரா சிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித் துள்ளார். சாதாரண தரப்பரீட்சை மார்ச் 11ஆம் திகதி நிறைவடைய வுள்ள நிலையில் மார்ச் 15ஆம் திகதி அனைத்து பாடசாலைகளையும் ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் நெலும்மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு சலுகை கொடுப்பனவு முறையில் மடிக்கணனிகள் வழங்கும் திட்டம்

கொழும்பு, பெப்.10

பல்கலைக்கழக அனுமதியை எதிர் பார்த்திருக்கும் மாண வர்களுக்கு சலுகை கொடுப்பனவு திட்டத்தின் கீழ் மடிக்கணனிகளை வழங்கும் திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஆரம்பமானது.



முழு கல்வி முறையையும் தற்காலத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் டிஜிற்றல் மயமாக்குவதற்கான 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்துக்கு அமைவாக மக்கள் வங்கியின் உதவியுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கு மக்கள் வங்கி 03 பில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது.

இணைய இணைப்பு, மென் பொருள் பொதி மற்றும் 4 வருட உத்தரவாதத்துடன் மடிக் கணனிகள் வழங்கப்படுகின்றன. ஒரு கணனியின் பெறுமதி 80 ஆயிரம் ரூபாவாகும்.

தொழிலொன்று கிடைத்த பின்னர் 06 ஆண்டுகளில் மொத்த பெறுமதியை திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில் கடன்கள் வழங்கப்படுகின்றன. மாணவராக இருக்கும் காலத்தில் மாதாந்தம் செலுத்த வேண்டிய தொகை 500 ரூபாவாகும்.

2021ஆம் ஆண்டில் பல்கலைக்கழக நுழைவைப் பெறும் ஆறு புதிய மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தை அடையாளப்படுத்தும் வகையில் அதற்கான கடிதங்களை நேற்றுக் காலை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி வழங்கினார்.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ)

## ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவில் சத்தியாக்கிரகப் போராட்டம்!

வவுனியா, பெப்.10

வவுனியா பூந்தோட்டம் சிறிநகர் கிராம மக்கள் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டுள்ளனர்.



20 வருடங்களாகியும் தமது கிராமத்துக்கு காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை, உட்கட்டுமான வசதிகள் செய்து தரப்படவில்லை. மைதானம் இல்லை. வீட்டுத்திட்டம் வழங்காமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல வருடங்களாகியும் தமது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை. இது தொடர்பில் ஜனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர், அரச அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எமது விடயத்தில் எவரும் கரிசனை கொள்ளவில்லை என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

உட்கட்டுமானம் சீரின்மையால் மழைக்காலங்களில் வீடுகளில் நீர்தேங்கி நிற்கிறது. காணி உரிமைப்பத்திரம் வழங்கினால் அதனை வங்கிகளில் வைத்து கடன்பெற்றாவது வீடுகளை கட்டிக்கொள்ளமுடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தமது அடிப்படை கோரிக்கைகள் தொடர்பில் அதிகாரிகள் பலமுறை வாக்குறுதிகள் வழங்கியும் இதுவரை எந்தவொரு வாக்குறுதியும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இதன்போது, சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச செயலாளர் ந.கமலதாசன், பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம் ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

முதற்கட்டமாக கிராமத்தில் உள்ள 95 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், ஏனைய காணிகள் குளத்தின் ஒதுக்கத்துக்குள் வருகிறது என்றும் அதனை உரிய திணைக்களம் விடுவித்து தந்தால் அதற்கான உறுதிகளையும் வழங்க முடியும் என்று பிரதேச செயலாளர் தெரிவித்ததுடன், ஏனைய பிரச்னைகள் தொடர்பில் சாதகமாக ஆராய்வதாக தெரிவித்திருந்தார். அத்தோடு கிராமத்தையும் பார்வையிட்டிருந்தார்.

இதேவேளை போராட்டம் இடம்பெறும் பகுதிக்கு சென்ற நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் கிராமத்தின் பின்பகுதியில் குளத்தின் நீரேந்து பகுதியில் 55 பேரது காணிகள் அமைந்துள்ளன. அதனை விடுவிப்பது தொடர்பில் எமது தலைமை அலுவலகமே தீர்மானிக்கமுடியும் என்றும் எனவே நீங்கள் கோரிக்கைகளை வழங்கினால் மேலதிக நடவடிக்கைகளுக்காக அதனை எமது தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைப்பதாக தெரிவித்தனர். எனினும் மக்களின் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. (எ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கு - கிழக்கில் காணி அபகரிப்பு ஆராய்வதற்கு விஷேட பொலிஸ் பிரிவு

## அமைச்சர் சந்திரசேன தெரிவிப்பு



கொழும்பு,பெப்.10

**வடக்கு - கிழக்கு காணி அபகரிப்பு தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்து அதுதொடர்பில் ஆராய விஷேட பொலிஸ் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது என காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு - கிழக்கு உட்பட பல மாகாணங்களிலிருந்தும் காணி அபகரிப்பு தொடர்பான முறைப்பாடுகள் பல கிடைக்கப்பெற்றுள்ளன. பொதுமக்களுடைய காணிகள் கைத்தொழில் செயல்பாடுகள், வேறு வேலைத்திட்டங்கள், சுற்றுலாத்துறை செயல்பாடுகளுக்கு என அநாவசியமான முறையில் சூறையாடப்பட்டுள்ளன. இந்த விவகாரம் தொடர்பில் நான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தெரியப்படுத்தியதையடுத்து விஷேட பொலிஸ் பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற சிரேஷ்ட முன்னாள் பொலிஸ்மா அதிபர் சுனித் எதிரிசிங்கவின் தலைமையில் இந்த விவகாரம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம்.

அண்மையில் காணி அபகரிப்பு தொடர்பில் கண்காணிப்பதற்கு திருகோணமலை மாவட்டத்துக்குச் சென்றிருந்தேன். இதன் போது எனக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை ஆராய்வதற்காக குறித்த விசாரணை குழுவினர் குச்சவெளி, நிலாவெளி ஆகிய பிரதேசங்களுக்குச் சென்றுள்ளனர். 300 குடும்பங்கள் வரை வசிக்கும் குச்சவெளி பிரதேசத்துக்குச் சென்று அந்த பிரதேசத்தின் எரக்கண்டி பாலத்துக்கு அண்மையிலிருந்து சலப்பியாறு பாலம் வரையான பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைளை மேற்கொண்டிருந்தனர்.

அந்தப் பகுதியில் சுமார் 136 குடும்பங்கள் வசிக்கின்றன. ஆனால் 55 குடும்பங்களுக்கே அரசாங்கத்தால் காணி உறுதி வழங்கப்பட்டுள்ளது. அதில் 76 குடும்பத்தினர் சட்டவிரோதமான முறையில் வசித்து வருகின்றனர். 14 குடும்பங்கள் தொடர்பில் எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லை. இதனால் நாட்டில் அதிகளவான வரி வருமானம் இழக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது- என்றார். (எ)

# மலையக மக்களின் உரிமைகளுக்காக வீதியில் இறங்கிப் போராடவும் தயார்

## செந்தில் தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு,பெப்.10

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேலை நாள்கள் 13 நாள்களாக மட்டுப்படுத்தப்படமாட்டாது. இலக்கை அடைந்த பிறகு எதிர்க்கட்சியில் உள்ள தொழிற்சங்கங்கள் பெருந்தோட்ட கம்பனிகளின் ஊடக பேச்சாளர்கள் போல் கருத்துக்களை வெளியிடுகின்றனர். பெருந்தோட்ட மக்களின் உரிமைக்காக வீதிக்கிறங்கிப் போராடவும் தயார் என இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரத்தில் சிறந்த தீர்வைப் பெற்றுள்ளோம். முத்தரப்பு பேச்சுவார்த்தை ஊடாக சாதகமான பதில் கிடைக்கப் பெற்றது. பெருந்தோட்ட கம்பனிகளின் நிபந்தனைகளுக்கு அடிபணியவில்லை.

கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் எதிர்த்தரப்பில் உள்ள மலையக தொழிற்சங்கத்தினர் இதுவரை காலமும் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யாக்கப்பட்டுள்ளன.

13 நாள்கள் மாத்திரம் வேலை என்றால் மிகுதி 17 நாள்கள் யாரை கம்பனிகள் வேலைக்கு அமர்த்தும்? வெளிப் பகுதியில் இருந்து தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த தோட்டத் தொழிலாளர்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள்.

வெளியாட்களை வேலைக்கமர்த்துவதால் கம்பனிகளே பாதிக்கப்படும். ஆகவே 13 நாள்கள் மாத்திரம் வேலை என்பது வெறும் வதந்தியாகும்.

மலையக மக்களின் உரிமைக்காக வீதிக்கிறங்கிப் போராடவும் நாம் தயாராகவுள்ளோம். ஆட்சி அதிகாரம் எதுவும் இல்லாத காலத்தில் கூட பெருந்தோட்ட கம்பனிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளோம்.

அந்தவலு தற்போதும் உள்ளது. மலையக மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க அதிகாரத்தில் இருக்க வேண்டிய அவசியம் கிடையாது.' - என்றார். (எ)

# சட்டக்கல்லூரி இறுதிப் பரீட்சை விவகாரத்தில் மாணவர்கள் கோரிக்கைகளுக்கு அமைய தீர்வு

கொழும்பு,பெப்.10

சட்டக்கல்லூரி இறுதிப் பரீட்சையை ஆங்கில மொழியில் நடத்துவது தொடர்பான பிரச்னை 2013 ஆம் ஆண்டு முதல் நீடிக்கின்றது. இந்தப் பிரச்னைக்கு மாணவர்களின் கோரிக்கைகளுக்கு அமைய தீர்வு வழங்கப்படும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டு முதல் சட்டக்கல்லூரி தேர்வினை ஆங்கில மொழியில் மாத்திரம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனக கூறப்படுகின்றமை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்தால் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்று கூறினால் அதனை மனித உரிமைகள் ஆணைக்குழு ஊடாகத் தீர்த்துக்கொள்ள முடியும். தமிழ் மற்றும் சிங்களம் என்பவை தேசிய மொழிகளாக காணப்படும் அதே வேளை ஆங்கிலம் தொடர்புபடுத்தல் மொழியாகக் காணப்படுகின்றது. இந்தப் பிரச்னை பல வருடங்களுக்கு முன்பிருந்தே காணப்படுகின்றது.

எனவே இது மாணவர் சங்கம் உள்ளிட்டவற்றால் பேசி தீர்க்கப்பட வேண்டியவையாகும். சட்டக் கல்வி தொடர்பான புத்தகங்கள் ஆங்கில மொழியில் காணப்படுவதால் சிலர் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்திருந்தனர். எனினும் தற்போதுள்ள மாணவர்களில் பெருமளவானோரின் கோரிக்கைக்கு அமைய இதற்குத் தீர்வு காணப்படும். இதில் பக்க சார்பாகவோ, சர்வாதிகாரமாகவோ தீர்மானங்கள் எடுக்கப்பட மாட்டாது- என்றார். (எ)

அருந்ததி
இணைய திருமண சேவை

மணமகன் விபரம்

13312 | வே | 1983
குரும்பசிட்டி | இந்து | செவ் : 08
Software Engineer | Germany
மகம்(சிம்மம்) | 174செ.மீ

13500 | வே | 1984
வல்வெட்டி | இந்து | UK |
Working in shop | லக்.செவ்
திருவோணம்(மகரம்) | 165செ.மீ

13900 | வே | 1984
அரியாலை | இந்து | செவ் : 02
It Company | Australia
அனுஷம்(விருச்சிகம்) | 155செ.மீ

13858 | வே | 1984
கந்தர்மடம் | இந்து
Senior Network Engineeer
Singapore | கேட்டை (விருச்சிகம்)
155செ.மீ

13115 | வே | 1984
கந்தர்மடம் | இந்து |
Software Engineer | Sri Lanka |
சுவாதி(துலாம்) | 168செ.மீ

மணமகள் விபரம்

13172 | வே | 1984
இணுவில் | இந்து |
Area Inspector | Sri lanka |
ஆய்யிலியம்(கடகம்) | 160செ.மீ

13130 | வே | 1985
Divorced | யாழ்நகரம் | இந்து
Sri Lanka | N/A
உத்திரட்டாதி(மீனம்) | 163செ.மீ

13822 | ப | 1987
பொலிகண்டி | இந்து | Switzerland
பூராடம்(தனுசு) | 160செ.மீ
Assistant Auditor | செவ் : 01

13476 | வே | 1987
தெல்லிப்பளை | இந்து |
Marine Officer | Sri Lanka |
மூலம்(தனுசு) | 168செ.மீ

13970 | வே | 1987
Divorced | சுழிபுரம் | இந்து
Researcher | Oman
கு.செவ் : 09 | 153செ.மீ
ஆய்யிலியம்(கடகம்)

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கோரிக்கை முன்வைக்க சீனாவுக்கு உரிமை

## இறுதித்தீர்மானத்தை அரசாங்கமே எடுக்கும் - கெஹலிய

கொழும்பு,பெப்.10

இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கான கோரிக்கைகளை முன்வைப்பதற்கு சீனா உள்ளிட்ட எந்தவொரு நாட்டுக்கும் சுதந்திரம் இருக்கிறது. ஆனால், அவை தொடர்பில் இறுதித் தீர்மானம் அரசாங்கத்தாலேயே எடுக்கப்படும். அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு மாறாக எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்பட மாட்டாது என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இணைய வழியூடாக இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

கேள்வி: கொழும்பு இலங்கை வங்கிக் கட்டடம் உள்ளிட்ட இரண்டு கட்டடங்



கள் சீன அரசாங்கத்தால் கோரப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் சீன அரசாங்கத்தால் இதுபோன்று ஏதேனும் கட்டடங்கள் கோரப்பட்டுள்ளனவா?

பதில் : அபிவிருத்தித் திட்டங்களுக்காக கோரிக்கைகளை முன்வைப்பதற்கான சுதந்திரம் அனைவருக்கும் உண்டு. ஆனால் அவற்றை வழங்குவதா? இல்லையா? என்பதை அரசாங்கமே தீர்மானிக்கும். இவை தொடர்பில் அரசாங்கம் பின்பற்றும் கொள்கையுள்ளது.

அந்தக் கொள்கைக்கு அமையவும் சுபீட்சத்தின் நோக்கு கொள்ளைத் திட்டத்துக்கு அமைய செயல்படுவோமேயன்றி அதனை மீறி எவ்வித செயல்பாடுகளும் முன்னெடுக்கப்பட மாட்டாது- என்றார். (எ)

# கொரோனாவால் மேலும் ஐவர் மரணம்

கொழும்பு,பெப்.10

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் ஐவர் உயிரிழந்தனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 370 ஆக அதிகரித்துள்ளது. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : பாரதீ
பெண்கள் மருத்துவம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - நேரலை



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்

**இரவு**
7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்



10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதசரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் சுத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் வரலாறு
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் கணிதம்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் சரவணை ஆதிஞானவைவர் ஆலய திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் திருவிழா

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்